;நிதிதான் நிறைந்த | ;கோடி கொடுப்பினும் ||
;நீநாவை மாற்றுதல் | ; நீதியல்லவே என்றாள் ||
;மதித்துமனம் மகிழ்ந்தே | ; உபசரியார் மனையில் ||
;மனம்பொருந்தியே உண்ணல் | ;மனிதனுக்கிழுக் கென்றாள் ||
((மதியா தார்)

▲ ▲

பாடல் 95

இராகம்: பிலகரி — ஆ- ஸ்ரிகபதஸ்ஸ
தாளம்- ச, ஏகம் — அ - ஸ்நிதபமகரிஸ
(29வது மே. க. ஜன்னியம்)

பல்லவி

எத்தனை தான் சொல்லியும் நிதமலைந்து ||
ஏய்க்கும் மனக்குரங்கே கேள் நீ ||

அனுபல்லவி

நித்தமும் உன்னால்ப டுந்துன்பம் கொஞ்சமோ ||
கட்டிவைத்தும் மீறிக் கர்வங்காட்டுகின்றாய் || (எத்தனை)

சரணம்

2. ;பக்தியுடனேவாழ் பாவத்திற் கஞ்சென்று ||
;படித்துப்படித்துப்ப ரிவுடனே சொன்னேன் ||
;நித்திரை யின்றிக் கோடாகோடி நினைந்து||
;நீசெய்யும் குள்ளத்தனங்கள் நானறிவேன் || (எத்தனை)

2. பட்டம் பதவிக்கு ஆசைகாட்டிப் பெரும் ||
பணத்தைப் பெற்றிட நீ மோசம, செய்வாய் கெட்ட ||
துட்டரிடம் போய்த்துணை செய்யச் சொல்லுவாய் ||
தூயவரைக்கண்டால் தூரத்தால் ஏகுவாய் || (எத்தனை)

8. பெரியநோக்கமென வேடங்கள் போடுவாய் ||
பரிந்து பலபேசிப் பாதாளம் தள்ளுவாய் ||
கருணை இன்றி உன்னைக் கல்லாக்கிக் கொள்ளுவாய் ||
காணாதவைகளைக் கண்டபோற் சொல்லுவாய் || (எத்தனை)



4. ஆணவப்பேய் பிடித்துக் கூத்து ஆடுவாய் ||
ஆண்டவனை மறந்து பல பேசுவாய் ||
வீணில் ஆசைகளால் விட்டில்போய் வீழுவாய் ||
வெந்து வேதனையால் வாழ்வை வீணாக்குவாய் || (எத்தனை)

5. உத்தமபிறவி என்றிதை உணர்ந்து ||
ஊருக்கும் உனக்கும் நல்லதைப் புரிந்து ||
நித்தியனைப் பக்தியோடுமே நினைந்து ||
;நித்தம் வணங்கியே நற்பயன்பெறுவாய் || (எத்தனை)

▲ ▲

பாடல் 96

இராகம் - சங்கராபரணம் — ஆ - ஸரிகமபதநிஸ்
தாளம் - ரூபகம் — அ - ஸ்நிதபமகரிஸ
(29வது மேளகர்த்தா)

பல்லவி

ஈசனை மற | வாதே என்றும் ||
இன்பநிலை | பெறுவாயே ||

அநுல்லவி

தேசமெங்கும் | நலங்கள் காண ||
நூய செயல்களைப் புரிவாய் |
தீயன தீஎன உணர்வாய் || (ஈசனைமறவாதே)

சரணம்

பஞ்சம் பிணிகள் | பாரிலகல ||
நெஞ்சம் மகிழ்வுற | வளம் பெருக்குவாய் ||
அஞ்சும் செயல்கள் | எங்குந்தான் அகல ||
அறவழி தன்னையே நாடு |
நிறைவுறக் கல்வியைத் தேடு|| (ஈசனைமறவாதே)

பாடல் 97

இராகம் - மாளவி — ஆ - ஸரிகமபநிமதநிஸா
தாளம் - ஆதி — அ - ஸ்நிதநிபமகமரிஸா
(28வது மே.க. ஜன்னியம்)

பல்லவி

இன்பமூட்டும்அமு | தாம் இன்னிசையே ||
ஈடில்லாதகலை | யாம் உலகிலே ||

அனுபல்லவி

துன்பம் தீர்க்கும் மருந் | தாம் வாழ்விலே ||
தூய்மையானவழி | யாம் . . . என்றும்|| (இன்ப)

சரணம்

1. சுரங்கள் சுருதியுடன் / சேர்ந்து கமகமுடன் //
அரங்கில் நடம்புரிய / அருவியெனக்கவர //
பரம்பொருளிலே மனம் / பக்குவமாய் லயித்திட //
பக்கவாத்தியம் பருந்தும் / நிழலும்போல் தொடர்ந்திட (இன்ப)

2. பாம்பும் மயிலும்பகை / மறந்து நின்றாடிட //
பசிபுல்மேய்தல் மறந்து / பரவசம் கொண்டிட //
பூம்பொழிலும் தழைத்துப் / புதுமையாய் விளங்கிட //
புன்முறுவலோடுயாவ / ரும்கேட்டு மகிழ்ந்திட // (இன்ப)

3. முத்தமிழில் நடுநின்று / முனிவரும் போற்றிடவே //
மன்னர்கள் மதித்தன்போடு / மங்காது தினம்வளர்க்க //
எத்திசையுமே பரவி / என்று மழியாமல் நின்று //
உத்தமகுணங்களெல்லாம் / உண்டாக்கியே மங்களமாய் //
(இன்ப)

▲ ▲

பாடல் 98

இராகம்: ஹிந்துஸ்தான் காப்பி — ஆ: ஸரிமபநிஸா
தாளம்: ஆதி — அ: ஸ்நிதநிபமகரிஸநிஸா
(22வது மேக் ஜன்னியம்)

பல்லவி

போதைதரும் எதையும் / அருந்தாதே //
மேதினி நல்வாழ்வை / அழிக்காதே //

அனுபல்லவி

;பாதகச்செயல் எதற்கும் / இது உரமூட்டும் //
;ஆதரவைகெடுக்கும் / 'இகழ்ச்சியை ஈட்டும் // (போதை)

இராகம்: பைரவி

சரணம்

1. ;மேதை நீ ஆயினும் / ;பாதலம் வீழ்த்தும் //
;வீதியிற் கிடத்தும் / ;விபத்தினில் மாட்டும்
;நீதிமன்றங்களில் / ;கைதியாய் நிறுத்தும் //
;தீதினால் கொடிய ;/சிறையிலே தள்ளும் / (போதை)

இராகம்; சகனா

2. ,கைப்பொருள் அழித்தே / ;கவலையில் ஆழ்த்தும் //
;மெய்ப்பொருள் அறியா / ;மயக்கமே ஊட்டும் //
தப்பானவழிகளில் / நாட்டமே கூட்டும் //
எப்போதும் தீயவர் / உறவையே நீட்டும் //

இராகம்: மத்தியமாவதி (போதை)

2. ;கடமையைக் கெடுக்கும் /; கடனாளியாக்கும் //
அடிமையாய்க்கொள்ளும் / ;அன்பினைக் கெடுக்கும் //
;குடும்பத்தைக் கெடுக்கும் /; கடும்பிணிகொடுக்கும் //
;உடலையேவாட்டி ;உயிரையே குடிக்கும் // (போதை)



பாடல் 99

இராகம்: தேஸ் — ஆ- ஸரிமபநிஸா,
அ- ஸநிதபமகரிஸா
தாளம்: ஆதி

பல்லவி (28வது மே. க. ஜன்னியம்)

; உலகுக்கு நீ என்ன / உதவியைச் செய்தாய் //
;உள்ளத்தைக் கேள்தம் / பி . . . இந்த //

அனுபல்லவி

;நிலையானகருமம் / என்னதான் செய்தாய் //
நினைத்துப்பார்தம் / பி . . இந்த// (உலகுக்கு)

சரணம்

1. ;வெம்பிவேதனையால்பின் / ;அழுவதால் பயனில்லை //
;விரைந்து நல்லசெயலைப் / ;பரந்தமனத்துடன் செய் //
;நம்பிநீ இறைவனை /; நாளும் தொழுவதினால் //
;நல்லருள் தனைப்பெறுவாய் / ;நயந்துரைத்தேன் இனிதாய் //
உலகுக்கு

2. ;பெருமை வீணில்பேசித் / ;திரிவதால் பயனில்லை //
;பெரியோர் வழிநின்று / ;பேதமையை நீக்கு //
;கருமத்தின் உயர்வாலே / ;காலத்தினை வெல்லு
;கருணையின் உருவாகி / ;இனியனவே சொல்லு// (உலகுக்கு)

3. ;எல்லா உயிர்களிலும் / ;இறைஉருவைக் காணு //
;எவ்வுயிர்க்கும் துன்பம் ;செய்யாதொழுகு//
;கொல்லாவிரதமே / ;குவலத்தில் உயர்வாம் //
கோதில்லாவாழ்வாலே / குன்றின் விளக்காவாய் // (உலகுக்கு)

பாடல்: 100

இராகம்: சுருட்டி — ஆ- ஸரிமபநிஸா
தாளம்- ஆதி — அ- ஸ்நிதபமகபமரிஸா
(28வது மே. க. ஜன்னியம்)

பல்லவி

;நல்லவராய் வாழ / வேண்டும் பிறந்த //
;நாட்டுக்குத் தொண்டுசெய்ய / வேண்டும் என்றும் //

அனுபல்லவி

;வல்லவராய்த்திகழ / வேண்டும் என்றும் //
;வளம்பெறவே நல்லன / ;செய்திடவேண்டும் // (நல்லவராய்)

சரணம்

;கலைகள் யாவையுமே / ;கற்றிடவேண்டும் //
;கடமையைப்பெரிதாய் / ;மதித்திட வேண்டும்//
;உளத்திலே அன்பொடு /
அனுதினம் இறைவனை வணங்கிட வேண்டும்.// (நல்லவராய்

பாடல் 101

இராகம்: ஹம்சத்வனி　　　ஆ- ஸரிகபநிஸ்
தாளம்: ரூபகம்　　　அ- ஸ்நிபகரிஸ

பல்லவி　(29வது மே. க. ஜன்னியம்)

அன்புகொள்வாய் / உயிர்களிலே //
ஆனந்தம்பொங்கும் / இறையருள் தங்கும் //

அனுபல்லவி

இன்பமாய் இவ் / வுலகில் வாழ //
இன்னல்கள் யார்க்கும் செய்யாதே /
இறைவனை வணங்கிடுவாயே // (அன்பு)

சரணம்

இனியசொற்களை / ;என்றுமே பேசிடு //
இதயம் நெகிழ்ந்து / ஏழைகட்கீந்திடு //
புனிதமுறவே / பெரியோரை நாடு //
புண்ணிய நற்செயலாலே /
பண்ணில் மாண்புறு வாயே // (அன்பு)

▲　▲

பாடல் 102

## முல்லைத்திணை

### காடும் காடுசார்ந்த இடமும் முல்லை

காடும் சோலையும் கானாறும் கடந்து பொருளீட்டச் சென்றான் தலைவன். அவன் வருவேன் எனக்கூறிச் சென்ற காலமும் கடந்து விட்டது, மீண்டுவரவில்லை. துயரடைந்தாள் தலைவி. இந் நிலையில் கனவொன்று கண்டாள்.

மலர்ந்த தாமரையில் வரிவண்டு வந்து தேனை உண்டு மயங்கிய காட்சி. இக்கனவைக்கண்டும் மனச்சாந்தி அடைந்தாளில்லை. ஆற்றங்கரை மணலில் கண்மூடிக்கொண்டு வட்டமாகக் கூடல்இழைத்துப்பார்த்தாள். கண்விழித்துப் பார்த்தபோது இருமுனைகளும் அழகாகப் பொருந்தி இருந்தன.

மேலும் நல்ல அறிகுறியாக இடது கண்ணும் இடது தோளும் துடித்தன.

மாலையில் முல்லைக்கொடி மலர்வதையும் காண்கிறாள் தலைவி. குறித்தகாலத்தில் திரும்பிவராமல் காலம் தாழ்த்தும் தலைவனைப் பற்றியும், தன்னிலை பற்றியும்தோழியிடம் கூறுகிறாள்.



## இராகமாலிகை

இராகம்: தேஸ்　　　தாளம்: ஆதி

பல்லவி

;மலர்ந்தசோலையில் / ;மருவிடும் தென்றலென் //
;மனத்தினை மயக்குத / டி ..மானே //

அனுபல்லவி

;கலந்த காதலன் / ;இன்னும் வராததன் //
;காரணம் அறிகிலேன் / நெஞ்சம் கலங்குதே // (மலர்ந்த)

சரணம்

இராகம்: கானடா

;மலர்ந்த அவர்முகம் / ;மனக்கண் முன் தோன்றுதே //
;மாது என்கண்கள் நீர் / ;சிந்திக் கலங்குதே //
;நிலந்தனில் என்நிலை / ;யாரறிவாரடி //
;நீங்கிடாதவருடன் / ;நான் சேரும் நாளெதோ //

இராகம்: கல்யாணி　　　(மலர்ந்த)

;வாடிவாய்மூடிய ஓர் / ; வனசமலர் பொய்கையில் //
;வாட்டமகன்று வனப் /; போடு விரிந்திருக்க //
;நாடி அங்கே வந்த / ;வண்டொன்று நறுந்தேனை //
;நன்றாய்ப் பருகிவெறி / ;கொள்ளக் கனவு கண்டேன் //

இராகம்: சகானா　　　(மலர்ந்த)

;ஆற்றங்கரை மணலில் / ;அந்தியிலே நேற்று //தீ.
;ஆவலாய்க் கீறுமிட்டேன் / ;அழகாய் இணைந்தடி //
;நேற்றுத்தொட்டு இடது / ;கண்தோள்துடிக்குதடி //
நேசன்வரும் குறிகள் / ;பொய்த்திடுமோ சொல்லடி //

ஹிந்துஸ்தான் காப்பி

;கரும்பாய் இனித்திடவே கண்ணே வருவேன் என்றார் //
;கண்கள் கலங்கிடவே / .காற்றாய் வருவேன் என்றார் //
;இரும்பாகிவிட்டோடி / ;உள்ளமவருக்கிப்போ
துரும்பாய் நினைத்தாரோ / ;தூயமனம் மாறுமோ/ (மலர்ந்த)

இராகம்; மோகனம்

;முல்லைக்கொடியருகில் | ;முழுநிலவில முதல்நாள் ||
;மெல்ல அணைத்து முத்த / ;மீந்தார் மிகநாணினேன் //
;வல்லிக்கொடியே வண்ணத் / ;தாமரையே முத்தே //
;வணங்கும் தெய்வத்திலானை / :வாழ்வில் கைவிடேன் என்றார்
(மலர்ந்த)

▲ ▲

பாடல் 103

## தமிழ்த்தாய்

### விருத்தம்

அழகுமிகு பொதியமலை முனி வளர்க்க
அகிலமெலாம் புகழ்பரவ அரசி யானாய் /
அன்புடனே மூவேந்தர் நாளும் போற்றி
அன்றுவளர் சங்கமதில் எழிலாய் நின்றாய்
தெளிவுதரு திருக்குறளில் உயர்வாய் நின்றாய்
திசையனைத்தும் போற்றிசெய்யப் பரந்து நின்றாய்
தெய்வமொடு இணையவைக்க நால்வர் தந்த
தோத்திரத்தால் அற்புதங்கள் செய்து நின்றாய்
தொழுதுனக்கே பணிசெய்த கம்பன் அவ்வை
துரிதமொடு வசைபாடு காள மேகம்
தூயவளம் காணவைத்த இளங்கோ கூத்தர்
தீரமுறு பாரதியார் ஏனை யோர்கள்
வளமுறவே பலஅணிகள் செய்து வைத்தார்
வாழ்வுதர நெஞ்சமெலாம் நிறைந்து நின்றாய்
வையமதில் எந்நாளும் வளர்ந்து நின்றே
உய்யவைப்பாய் தமிழ்த்தாயே போற்றி போற்றி

▲ ▲

பாடல் 104

இராகம்: ஹரகரப்பிரியா ஆ- ஸரிகமபதநிஸ்
தாளம்: ஆதி அ- ஸ்நிதபமகரிஸ
(22வது மேளகர்த்தா)

பல்லவி

:முத்தமிழே உயிரே | ;நித்தில மே தேனே //
|நித்தமும் பணிபுரிந்தே / ;சித்தம் மகிழ்ந்திடுவோம் //

அனுபல்லவி

;உத்தமமானஇயல் / ;நூல்கள் பல கொண்டாய் //
;தித்திக்க ஏழிசையாய் / ;எத்திக்குமே பரந்தாய்// (முத்தமிழே)



சரணம்

;நாடகவகை பலவாய் / ;நானிலத்தில் சிறந்தாய் //
;தேடரியநிதியாய்த் / ;தங்கிநலம் புரிந்தாய் //

;நாடி இணைவோர்க்கு / ;நாளும் உயர்வீந்தாய்//
அழகுமிகுந்தவளே
ஆற்றல் நிறைந்தவளே //

இளமை நிதமுமாய் இனிமை மிகுதியாய் /
இணையின்றி இலங்கிடும் பெருமைதனையுடையாய் //

▲ ▲ முத்தமிழே

பாடல் 105

இராகம்: நடபைரவி ஸரிகமபதநிஸ்
தாளம்: ஆதி ஸ்நிதபமகரிஸ

பல்லவி (20வது மேளகர்த்தா

;சுந்தரச் செந்தமிழே /; சிந்தையில் நிறை அமுதே //
;வந்திடுவாய் உயர்ந்தே /; தந்திடுவாய் மகிழ்வே //

அனுபல்லவி

;மந்தமாருதம் மருவும் /; தென்பொதிய மலையில் //
;வந்தகுறுமுனியால் /; வளமுடன் முன்வாழ்ந்தாய் // (சுந்தர)

சரணம்

1. ;குணகடல் குமரி /; குடக வேங்கட எல்லை //
;மணங்கமழத் திகழ்ந்தாய் / மனநிறைவாய்ப் பரந்தாய் //

;அணியெனப் பலநூல்கள் /; ஆக்கிஅன்று ஈந்தார்.//
அகமது மகிழ்ந்திருந் தரசாண்டாய் /
சுகமதை அனைவர்க்கும் நிதமீந்தாய் // (சுந்தர)

2. ;அலைகடல் கொண்டது /; அனலும் செல்லும் உண்டது //
;அன்னியர் செயலால் /; பெருமை குறைந்தது //

;நிலைபெறப் பணிபுரிவோம் /; நித்தமுனைத்தொழுவோம் //

;நிந்தனை செய்பவர்தன்னை இகழ்வோம் /
;வந்தனை செய்திடவைத்து மகிழ்வோம் // (சுந்தர)

பாடல் 106

இராகம் : இராமப்பிரியா　　ஆ. ஸரிகமபதநிஸ
தாளம் : ஆதி　　அ. ஸ்நிதபமகரிஸ
52-வது மேளகர்த்தா

பல்லவி

1. ; இனிய தமிழ் மொழியில் / ; முதல் எழுத்து முப்பது //
; இதை யறிவாய் மக / னே ......——......— .. //

2. ; இனிய தமிழ் மொழியில் / ; முதலெழுத்து முப்பது //
; இதில் உயிர் ஈராறு / ; மெய் பதினெட்டாகும் //
(இனிய தமிழ் மொழியில்)

அனுபல்லவி

; தனித்தனி உயிர் யாவும் / ; மெய் தனிலே ஏற //
; வனப்புறும் இருநூற்றுப் / பதினாறு உயிர்மெய்யே //
(இனிய தமிழ் மொழியில்)

சரணம்

; சார்பெழுத்து ; குறுக்க / ; இகர உகரமெனச் /
; சாற்றினர் தொல்காப்பியர் / ; ஆய்தம் தன்னோடு //
; சேர்ந்த எழுத்திவைகள் ; செந்தமிழ் மொழியாகிச்//
சுந்தரமாக இலங்கிப் பல்காலம் /
சந்ததம் சிந்தைகளில் மகிழ்வூட்டும் //
(இனிய தமிழ் மொழியில்)

▲　▲

பாடல் 107

இராகம் : மோகனம்　　ஆ. ஸரிகபதஸ்ா
தாளம் : ஆதி　　அ. ஸ்தபகரிஸ்ா
28-வது மே.க. ஜன்னியம்

பல்லவி

வந்தனை செய்தோம் தமிழ்த்தா / யே —— இந்த //
வைய மெல்லாம் புகழ் பரவ / வாழும் உன்தன் பொன்னடிக்கு//

அனுபல்லவி

சுந்தரி நிரந்தரி சிந் / தை கவர்ந்த எம்மொழியே //
சந்ததமும் நீ மகிழச் / ; சிறந்த செயல்புரிவோம் //
(வந்தனை)



சரணம்

1. நோய்கள் கொல்லும் வேழம் விடம் / நீற்று வெம்மை நீங்கவைத்தாய் //
மாய்ந்தவர் மீளவே செய்தாய் / கடல்மேல் கல்நீந்த வைத்தாய் //
தீயில் எரியாது நின்றாய் / திறந்து கோயில் தாளிட்டாய் //
பாயும் நதி எதிர் சென்றாய் / பாண்டியன் கூன் நீக்கிவைத்தாய் //
(வந்தனை)

2. வள்ளுவனார் அவ்வை கம்பர் / வசைக்கவி காளமேகம் //
உள்ளங்கவர் இளங்கோ / அகத்தியர் கீரர் கூத்தர் //
அள்ளித்திருப் புகழ்தரு / அருணகிரி மற்றோரும் //
அன்புடன் ஆக்கப் பரந்தாய் / அரும்பயன் தருகின்றாய் //
(வந்தனை)

▼　▼

பாடல் 108

இராகம்- மோகனம்　　ஆ- ஸரிகபதஸ்ா
தாளம்- ஆதி　　அ- ஸ்தபகரிஸ
(28வது மே. க. ஜன்னியம்)

பல்லவி

; எப்படி உயர்வேனை / யா ........... ஈசனே //
; உன்னருளால் அன்றி / ; ஏதும் நிறைவுறுமோ //

அனுபல்லவி

; இப்புவி வாழ்வுதனில் / ; மயங்கி என்றும் அலைந்தேன் //
; இன்னும் எத்தனை பிறவி / ; வருமோ யானறியேன் //
(எத்தனை

சரணம்

1. ; நித்தம் அலையும் மனக் / ; குரங்கைக் கட்டி அடக்கி //
; நினைவை நின்மேல் செலுத்தி / ; நெடுந் தவமே புரிய //
; உத்தம நிலைதருவாய் / ; உமை பாகனே பரனே //
; உறுதுணை நீயேதான் / ; என்பதை நன்குணர்ந்தோன் //
(எப்படி)

2. ; அன்பரின் உள்ள மதில் / ; கோயில் கொள்பவனே //
; அனைத் துயிர்களையுமே / ஆட்டி வைப்பவனே //
; துன்பமில்லா இன்ப / ; வீடு தருபவனே //
; தாண்டவம் ஆடிடும் / ; ஆண்டவனே மெய்யனே //
(எப்படி)

பாடல் 109

இராகம்: யமுனா கல்யாணி ஆ: ஸரிகபமபதஸ்ா
தாளம்: ஆதி அ. ஸ்தபமபகரிஸ
(65வது மே. க. ஜன்னியம்)

பல்லவி

; கண்ணனைக் கண்டே நீ / ; கன்னி என் நிலை சொல்லு //
; கானக் குயிலே சென்று / வா ; விரைவாக //

அனுபல்லவி

; மண்ணை அள்ளி உண்டு / ; மாயங்கள் செய்தவனாம் //
; மனத்தையே கொள்ளை கொண்டான் /; மறக்கமுடியுதில்லை //
(கண்ணனை)

சரணம்

1. ; முல்லை மலர் மாலையில் / ; சிரித்தேளனம் செய்யுதே //
; முழுமதி கனலாகி / ; உடலை எரிக்குதே //
; நல்ல உணவு எல்லாம் / ; நஞ்சாய்க் கசக்குதே //
; நானென் செய்வேன் நீ / ;நயமாய் அழைத்து வா //
(கண்ணனை)

2. ; வெண்ணெய் திருடியவன் / ; விந்தையாய்ப் பேசிடுவான் //
; விரும்ப இதமாய்ச் சொல்லு / ; வீணில் தாமதிக்காதே //
; எண்ண மறிந்த அவன் / ; ஏதும் தெரியா தென்பான் //
; இதை நீ நம்பாதே / ; இசையவைத்தே கூட்டிவா //
(கண்ணனை)

▲ ▲

பாடல் 110

×
இராகம்: தேஸ் ஆ ஸ்ரிமபநிஸ்ா
தாளம்: ஆதி அ ஸ்நிதபமகரிஸ
28வது மே. க ஜன்னியம்

பல்லவி

;நீலமயிலே / எனக்கோர் உதவி செய் //
;நின்னை என்றும்மற / வேன் இது தருணம் //

அனுபல்லவி

;ஆலமுண்ட அரனார் /; குமரன் முருகனை //
; அழைத்திங்குகொண்டுவரு / வாய் விரைவாய் // (நீலமயிலே)



சரணம்

1. ;காலமெல்லாம் நினைந்து /; காத்திருக்கின்றேனே //
;கந்தாகடம்பா என்று /; கூவிநின்றேனே //
;சீல முகங்காணச் /; சிந்தை நெகிழ்ந்தேனே //
;செகமதிலே நிதமும் / ;செபதவம் செய்தேனே // (நீலமயிலே)

2. ;ஆறு முகங்கண்டால் /; ஆறுதல் உண்டாகும் //
;அங்கை பனிரண்டாலும /; அணைக்க அச்சம் அகலும் //
;சீறிவரும் வினைகள் /; அத்தனையும் தொலையும் //
;சந்ததமும மகிழ்வேன் / சென்மம் சிறப்புறவே நீலமயிலே)

3. ;பாடிப்பாடி நெகிழ்ந்தேன் /; தேடித்தேடி அலைந்தேன் //
;வாடிவாடி மெலிந்தேன் /; ஓடிஓடி உழன்றேன் //
;ஆடிஆடிமகிழ்வேன் /; 'அற்புதம் தங்கிடவே //
;அருணகிரிக்கருள்செய் /; ஐயனடி சேருவேன் // (நீலமயிலே)

▲ ▲

பாடல் 111

இராகம், பௌளி ஆ: ஸரிகபதஸ்ா
தாளம்: ஆதி (திஸ்ரகதி) அ: ஸநிதபகரிஸா
(15ம் மே.க. ஜன்னியம்)

பல்லவி

அன்னை பராசக்தியே நின்னையே /
அன்பொடு கைதொழுதேன் //

அனுபல்லவி

இன்னல் எவ்லாம் அகற்றி என்றுமே /
இன்பவாழ்வு தருவாய் // (அன்னை)

சரணம்

1. எங்கும் நிறைந்து நின்றாய் உயிர்கள் /
யாவுமே உய்யவைப்பாய் //
பொங்கும் கருணையினால் விரைந்து /
பேதமை நீக்கிடுவாய் // (அன்னை)

2. நாரணன் சோதரியே உமையே /
நற்றவத்தோர் நிதியே //
பூரணியே பரையே அடியேன் /
புந்தியில் நின்றிடுவாய் // (அன்னை)

3. நீலகண்ட முடையான் பாகம் /
நித்தமமர் பவனே //
சிலமுறும் பணிகள் செகத்தில் /
செய்யவே சேர்ந்து நிற்பாய்// (அன்னை)

▲ ▲

பாடல்; 112

இராகம்: கீர்வாணி — ஆ- ஸரிகமபதநிஸ்
தாளம்: ஆதி — அ- ஸ்நிதபமகரிஸ
(21-வது மேளகர்த்தா)

பல்லவி

; நாரணனின் சக்தி /: திரு மகளே //
; நாடித் தொழுபவர்க்கு /: நிதி தருபவளே //

அநுபல்லவி

; பூரணமாய் உலகம் /; யாவும் விளங்கவே //
; புந்தி மகிழ்வோடு /; அருள் பொழிபவளே //
(நாரணனின்)

சரணம்

; சுந்தரமாய் விளங்கும் /; செந்தாமரைதனில் //
; சந்ததம் வீற்றிருப்பாய் /; சஞ்சலம் நீக்கிடுவாய் //
; வந்து வரந்தருவாய் /; வையத்தின் மீதிலே //
; வாழ்வு செழித்தோங்க /; நாளும் நின்னைத் தொழுதேன் //
(நாரணனின்)

▲ ▲

பாடல் 113

இராகம்: ஆபோகி — ஆ- ஸரிகமதஸா
தாளம்: ஆதி — அ- ஸ்தமகரிஸ
(22வது மே. க. ஜன்னியம்)

பல்லவி

நாமகளே தா / யே நாளும் உனையே //
; நயந்து துதிப்பவர்க்கு /; இரங்கி அருள்பவளே //

அனுபல்லவி

; பாமழையே தினம் /; பொழிந்திட வருவாய் //
; படிகமேனி கொண்டாய் /; அடியவர்க்கினியாய் // (நாமகளே)



சரணம்

; கானமதைத் தந்திடும் /; வீணைகையிலே கொண்டாய் //
; கலைகள் யாவினுக்கும் /; தலைவியாகி வந்தாய் //
; தேனும் பாலும் பழம் /; பலவும் கன்னல் அமுதும் //
; தூய மலரும் கொண்டு /; பூசை தினமும் செய்தேன் //
(நாமகளே)

▲ ▲

பாடல் 114

இராகம்; ரேவதி — ஆ- ஸரிமபநிஸா
தாளம்; ஆதி — அ- ஸ்நிபமரிஸா
(2வது மே. க. ஜன்னியம்)

பல்லவி

; தென்றலே செல் /; கண்ணனிடம் சொல் //
; தேன்மொழியால் சொல்வேன் / கே ட்ள் //

அனுபல்லவி

; குன்றை எடுத்தவன் /; குடை பிடித்தவன் //
; குழலை ஊதி /; மயங்கவைத்தவன் // (தென்றலே)

சரணம்

1. ; சோலை மலரின் /; வாசங்கொண்டுபோ //
; சோர்வுநீங்க /; வீசிய பின் சொல் //
; சாலக்காரன் /; சிந்தை கவர்ந்தான் //
; ஞாலம்தனிலே / மறவேன் என்றான் // (தென்றலே)

2. குன்றுசோலை /; தேடிநின்றேன் //
; குயிலைக்கேட்டேன் /; கிளியைக் கேட்டேன் //
; நன்றாய் ஆடும் /; மயிலைக்கேட்டேன் //
; நீலவானில் /; அவன் நின்றானாம் (தென்றலே)

3. ; மங்கை என்னை /; மறந்திட்டானோ //
; மாதவத்தோருளம் /; தங்குகின்றானோ //
; இங்குவிரைவாய் /; வந்திடவேசெய் //
; இனியான் பொறுக்கேன் /; இதயம் சோர்ந்தேன்// (தென்றலே)

பட்ல் 115

இராகம்- யமுனாகல்யாணி — ஆ- ஸரிகபமபதஸ்ா
தாளம்- ஆதி — அ- ஸ்தபமபகரிஸா
(65ன் மே. க. ஜன்னியம்)

பல்லவி

;வல்லிபுரத்தலத்தி / லே விந்தை செய்கண்ணா //
;நல்லருள்தந்திடு / வாய் நீல வண்ணா //

அனுபல்லவி

;எல்லை இல்லாவடிவாய் / ;எங்கும்நிறைந்தவனே //
;என்றுமே தொழுதேன் / ;இதயம் கவர்ந்தவனே //
(வல்லிபுர)

சரணம்

1. ;ஆழிக்கரை தனிலே / ;அமைந்த மணல் வெளியில் //
;அன்பர்கள் உய்திடவே / ;அழகுறு கோயில் கொண்டாய் //
;சூழும் தீவினை தனையே / ;நீக்கிக்காப்பவனே //
; சுந்தரமாய் இலங்கும் /
;சக்கராயுதனே கருடவாகனனே // (வல்லிபுர)

2. ;ஆதிசேடன்மீது / ;பள்ளிகொண்டவனே //
;அன்பினால் பார்த்தனுக்குச் / ;சாரதியானவனே //
;மாதவத்தோருளத்தில் / ;மகிழ்ந்து உறைபவனே //
;மாயங்கள் செய்யாமல் /
மனமிரங்கிவந்தென்னையாளுவாய் // (வல்லிபுர)

பாட்ல் 116

இராகம்: ஹம்சத்வனி — ஆ: ஸரிகபநிஸ்
தாளம்: ஆதி — அ: ஸ்நிபகரிஸ
(29 வது மே. க- ஜன்னியம்)

பல்லவி

நர்த்தன கணபதியே / ;அரன்மகனே //
;நாளும் நின்பாதம்பணிந் / தேன் ;; / அற்புதஜங்கர //

அனுபல்லவி

;அர்த்தம் மிகுந்தநடனம் / ;நவரசங்கள் மிளிர்ந்து //
;அழகுறுபாடலுடன் / தாளலயம் சிறந்திட //
தக்கிட தகதிமி தகஜொணு தகதிமி /
தாதரி கிடதக தரிகிட ஜெம்ஜெம் //
திக்கிட திமிதக தீம்தீம் திமிகிட/
தளாங்கு தரிகிட தொமென நடமிடு // (நர்த்தன)



சரணம்

;இயலிசை நாடகம் / ;இணைந்தெழிலாய் இலங்கும் //
;இனிமை மிகுந்த தமிழ் / ;வளர்க்க அருள்தருவாய் //
;ஜெயம்பெற விக்கினங்கள் / ;நீக்கும் விநாயகனே //
;சரவணசோதர /
பாசாங்குசனே பரிபூரணனே // (நர்த்தன)

ஜதி

பாடல்: 117

இராகம்: சங்கராபரணம் — ஆ - ஸரிகமபதநிஸ்
தாளம்: ஆதி — அ- ஸ்நிதபமகரிஸ
(29வது மேளகர்த்தா)

பல்லவி

1. ஆ டுகின் றான் ;ஐ / யன் ;பொன் / னம்ப லத்தில் //
அனல் மான் மழு துடி / கர மிசை / ;கொண் டு //
அன் பர்ம கிழ்ந் திட / தொண் டர்வ / ணங் கிட //
2. ஆ டுகின் றான் ;ஐ / யன் ;பொன் / னம்ப லத்தில் //
2ம் காலம்
அனல்மான் மழுதுடி கரமி சைகொண்டு /
அன்பர்ம கிழ்ந்திடத் தொண்டர் வணங்கிட
(ஆடுகின்றான்)

அனுபல்லவி

பா டக்கந் ;த ருவர் / வா ணிவீ ணைஇ சைக்கக் //
கூ டிஆ டக்கா ளியும் / ;தும் புரு / ;நா ரதர் //
அசுவ தரரோடு குண்டல ரும் /
இணைந் தேஇசையை / மகிழ்ந் தேஈய //

ஜதி

தாம்,த கிடதக ஜெம்ஜெம் தரித்த
தீம்,தி மித்ததக தீம்தீம் திமித்த //
தக்கிடகிடதக திக்கிடகிடதொம் தாதரிகிடதிமி தகதின்னம்தரி /
தாகுதனம்தரி ததகுதனம்தரி தோகுதனம்தரி ஜேகுதனம்தரி//
தகதகதகதக தத்தித்தாம் திகுதிகுதிகுதிகு தித்தித்தெய் /
தாகுதீ குதக தரிகுடுதிரிகுடு தளாங்குதிமிமென //
(ஆடுகின்றான்)

தரி சித்த வர்க்கு முத்தி /அளித் திடும் / தல மிதில் //
வரு முனி பதஞ் சலி / புலி யும்ப தம்ப ணிய //
அரி யும்உ யர்மு ழவு/
தன்னைமு ழக்கிட / அரம்பையர் ஆடிட //
அருகினி லேசிவ காமியு டன் /
அனவரத முமே / ஐந்தொ ழில்நிகழ //

ஜதி — (ஆடுகின்றான்)

பாடல் 118

இராகம்: கர்நாடக தேவகாந்தாரி — ஆ- ஸகமபநிஸ்ஂ
தாளம்- ஆதி — அ- ஸ்நிதபமகரிஸ
(22வது மே. க. ஜன்னியம்)

பல்லவி

நீ ல ;வண் ணக் / ;கண் ண / னை ;; //
நிதம் ;நி னைந் தே / ;உ ளம்உ ருகு தே //

அனுபல்லவி

சோ லைத னிலே அவன் / குழ லிசை / கேட் டு //
சேர்ந்துகு யில்பாட மயில்க ளாடவே /
ஆனி னம்வந்து / அருகில் ணையுமந்த // (நீலவண்ண)

சரணம்

கோ வர்த்த ன.. கிரி / மலை யைக்கு / டை. யாக்கிக் //
கொண் டுயா ;த வரை / மழை யிற்காத் ;த / வன் //
தா விக்கா ளிங்கன் தலை / தன் னில்பா தம் வைத்து //
பொல் லாக்கு ணம டங்க /
நல் லாய்மி / தித்து நின்று //

ஜதி

தஜ்ஜெம் ;தரித்த ஜெம்; தரித்ததக / தகஜெம் ;தரித்த / தெய்;
திமித்ததக //
தத்; தரித்ததக தகதரி தததக / தத்த ளாங்குதக / திமிதக
தமிதக //
தகனக னகனக தச்ஜெம் ;தரித்த / திமிதிமி திமிதிமி / திமித்த
;கிட //
தாம், தரித்ததக திம், தரித்ததக / தரிகிடதொம் தரிகிடதொம் /
தரிகிடதொம் என்றாடிய //
(நீலவண்ண)

முல் லைமொட் டும லர்ந்து / முறு வல்காட் / ,ட வே //
மெல் லத்தென் றல் வந்து / தா.. ;லாட் / ;ட வே //
நல் லமு முறி லவில் / மெல் லஅ / ருகில் வந்து //
சொல் லால்எ னைம யக்கி /
சிந்தைக வர்ந்தே / கைப்பி டித்தஅந்த // (நீலவண்ண)



பாடல் 119

## சப்தம்

இராகமாலிகை
இராகம்; — தாளம்; மிஸ்ரசாம்பு

1. காம்போதி

,தத்தெய் / யாத்தெய்யும் // தாத்தத் / தாம் //
தளாங்குதொம் ; / தகததிங்கிணதொம் //
ததன / தந்தன // தஜ்ஜொணு / ஜொணுதிமி //
ததன / தனகிட // தத்திம் / திமிகிட //
,தத்தெய் / யாத்தெய்யும் // தாத்தத் / தாம் //
மந்த / மாருதம் // வந்து / மருவிட //
முழும / தியும்வானில் // இலங்கித் தவழ்ந்திட //
சுந்த / ரம்திகழ் // ரூபன் / மாயவன் //
சிரித்த / படிஎன்முன் // தோன்றி / னான்சகி //
(ததனதந்தன)

2. ஹிந்துஸ்தான் காப்பி

மனது / மகிழ்மலர் // சோலை / தன்னிலே //
மங்கை / என்கையைப் / பிடித்திட் / டான் //
வனமுல் / லையின்மலர் // பறித்து / வந்தென்றன் //
சுருண்ட / கூந்தலில் // சூட்டி / னான்சகி //
(ததன தந்தன)

3. சண்முகப்பிரியா

மதுர / இசைதரு // குழலை / எடுத்துடன் //
மயக்கும் / இசைதனைப் // பொழிந்திட் / டான் //
நதியின் / நீரினில் // முழுகும் / நிலவது //
நெஞ்சு / கவரவே // அணைத்திட் / டான்சகி //
(ததனதந்தன)

4. ஆபோகி

விந்தை / செய்திடும் // மாய / வின்உரு //
நெஞ்சி / னில்வந்து // நுளையு / தே . . . //
கந்த / மலரினில் // வந்த / வண்டுபோல் //
சொந்த / மாக்கியே // தங்கு // தே சகி //
(ததன தந்தன)

5. மோகனம்

மலையைக் / குடையாகப் // பிடித்து / நின்றவன் //
மங்கை / என்னையே // மயங்க / வைத்தவன் //
தொலைவில் / அவன்குழல் // கேட்கு / தேமனம் /
துள்ளி / மகிழ்வது // கொள்ளு / தேசகி //
(ததனதந்தன)

பாடல் 120

## சப்தம்

இராகமாலிகை தாளம்; மிஸ்ரசாப்பு

இராகம்:

1. காம்போதி

,தத்தெய் | யாத்தெய்யும் || தாத்தத் | தாம் ||
தளாங்குதொம் | தகததிங்கிணதொம் ||

தகன | தந்தன || தஜ்ஜொணு | ஜொணுதிமி ||
ததன | தனகிட || தத்தீம் | திமிகிட ||
,தத்தெய் | யாத்தெய்யும் || தாத்தத் | தாம் ||

குன்று | தோறும்நின் || றாடி | யஅந்தக் ||
குமரன் | பெருமையைக் || கூற | வேநான் ||
நின்று | கேட்டதும் || உள்ளம் | நெகிழ்ந்தே ||
உருகு | தேமனம் || மகிழு | தேதோழி||

(ததனதந்தன)

2. பெகாக்

மன்றி | லாடரன் || நுதற்கண் | தருபொறி ||
மாரு | தம்சர || வணையிற் | சேர்த்திட ||
இன்பம் | தரும்ஆறு || குழந்தை | யாய்வனச ||
மலரில் | தவழ்ந்திட || உள்ளத்தில் | கண்டேன்தோழி ||

(ததனதந்தன)

3. கர்நாடக தேவகாந்தாரி

அன்பு | டன்உமை || அணைக்க | வேஒன்றாய் ||
அழகு | திகழ்ஆறு || முகம்கொண் | டான் ||
அன்னை | தந்தசக்தி || வேலினைக் | கையிற்கொண்டான்
அமர | ரிடர்தீரச் || சூரனைக் | கொன்றான்தோழி||

(ததனதந்தன)

4. மோகனம்

புள்ளி | மானைத்தேடும் || வேடன்வி | ருத்தனாய் ||
வள்ளி | மானைநாடித் || தினைப்பு | னஞ்சென்று ||
அள்ளி | வள்ளியூட்டத் || தேன்தினை | விக்கிவீழ்ந்தான் ||
கள்ள | மாய்வள்ளியைக் || கைப்பிடித் | திட்டான்தோழி||

(ததனதந்தன)

▲ ▲



பாடல் 121

## சப்தம்

இராகமாலிகை
காம்போதி

,தத்தெய் யாத்தெய்யும் || தாத்த | தாம் ||
தளாங்குதொம் | தகததிங்கிணதொம் ||

ததன | தந்தன || தஜ்ஜொணு | ஜொணுதிமி ||
ததன | தனகிட || தத்தீம் | திமிகிட ||
,தத்தெய் யாத்தெய்யும் || தாத்தத் தாம் ||

1. பித்தனி | லேநான் || பிரியம் | கொண்டேன்
பிறர்இ | கழ்ந்திடினும் || மனமக | ளர்ந்திடேன் ||
அத்தன | வன்சுடலை || ஆடி | என்றனர் ||
அதையும் நான்பொருட் || படுத்த | வில்லைத்தோழி ||

(ததனதந்தன)

2. சண்முகப்பிரியா

நஞ்சைத்தா | னேஉண்டான் || நல்லஅ | மிழ்ந்தான் ||
நல்லசெ | யல்நினைந்தேன் || நம்பிஉ | ளம்நெகிழ்ந்தேன ||
அஞ்சவ | ருங்காலனை || உதைத்த | ருள்செய்தவன் ||
அன்பர்பூ | சலாரிஉளக் || கோயிலு | கந்தான்தோழி ||

(ததனதந்தன)

3. பாகஸ்ரீ

கண்விழித் | துக்காமனை || எரித்தா | னென்றனர்||
கொடும்பூ | தங்கள் சூழ || நிற்கின்றான் | என்றனர்||
பெண்ணொன்றைப் | பாகத்திலும் || சடையி | லுமென்றனர் ||
நண்ணிநான்| பார்த்தபோது || உள்ளத்த | மர்ந்தான் தோழி||

(ததனதந்தன)

4. சிவரஞ்சனி

தாயைஇ | ழந்தபன்றிக் || குட்டிக் | ஞக்குத்தாயாய் ||
தூயபா | லைக்கொடுத்து | உயர்வாக் | கியும் வைத்தான் ||
ஆயும்அ | ரிபிரமற் || கெட்டாத | சோதியானான் ||
அன்பில | கப்படுவான் || அவன்மெய்த் துணைதோழி ||

((ததனதந்தன)

▲ ▲

பாடல் 122

## சப்தம்

இராகமாலிகை
இராகம்: காம்போதி    தாளம்: மிஸ்ரசாப்பு

,ததிதெய் | யாத்தெய்யும் || தாத்தத் | தாம் ||
தளாங்குதொம் | தகததிங்கிணதொம் ||
ததன | தந்தன || தஜ்ஜொணு | ஜொணுதிமி ||
ததன | தனகிட || தத்தம் | திமிகிட ||
,தத்தெம் | யாத்தெய்யும் || தாத்தத் | தாம் ||

1. மாயன்ம | கிமைதனை || எவ்விதம் | சொல்லுவேன் ||
மனதில் | நிறைந்தவன் || மயங்க | வைத்தவன் ||
ஆயர்சே | ரியிலவன் || செய்தவி | ளையாடல் ||
அத்தனை | யும்சொல்ல || ஆரால்மு | டியும்சகி ||

2. மாண்டு (ததனதந்தன)
வெண்ணெய்தி | ருடிஉண்டு || விளையா | டல்செய்தவன் ||
வஞ்சஅ | ரக்கிபாலை || உண்டுயிர் | முடித்தவன் ||
மண்ணைஉண் | டதறிந்து || தாய்யசோ | தாகண்டிக்க ||
கண்கலங் | கித்தன்வாயில் || லோகங்காட் | டினான்சகி ||

3. வசந்தா (ததனதந்தன)
உரலிற்கட் | டத்தவழ்ந்து || மருது | ரண்டைவீழ்த்தி ||
உற்றசா|பந்தனைக்கந் ||தருவ | ருக்குநீக்கி ||
அரவின்கர் | வந்தொலைய || அதன்மேல் || நடம்செய்தோன் ||
மலையைக்கு | டையாய்க்கொண்டு || மழையிற்காத் |
திட்டான் சகி ||

4. மத்தியமாவதி (ததனதந்தன)
கொடுமைசெய்| தகம்சனைக்,||கொன்றுபோ| ரில்வீழ்த்தினான்||
அபயமென் | றபாஞ்சாலிக் || கனந்தம் | துகிலீந்தான் ||
அடியவன் | பார்த்தனுக்குச் || சாரதி | யாய் அமர்ந்தான் ||
அன்பரின் | உள்ளமதில் || என்றுமி | ருப்பான்சகி ||
(ததனதந்தன)

பாடல் 123

இராகம் - கானடா    ஆ - ஸரிபகாமதநிஸா
தாளம் - ஆதி    அ - ஸ்நிபமகாரிஸா
(22ம் மே. க. ஜன்னியம்)

பல்லவி

'வெண்ணிலவே; | ;சொல்லுவாய் நீ ||
;வெண்ணெய்திருடிய || கண்ணனிடம் சென்று ||



அநுபல்லவி

;கண்துயிலாது | ;நின்னை நினைந்தே ||
கன்னிஒருத்திமிக வாடியேநின்று |
நின்னைநினைத்து மிக | உருகுகிறாள் என்று ||
(வெண்ணிலவே)

சரணம்

1. மலர்ச்சோலைதனிலே | ;மதுரக்குழல் ஊதி ||
;மானிலத்துயிர்களை | ;மயங்கவைப்பவன்||
பலபலகூறி மெதுவாய் வந்தான் |
சலசல எனஓ | டும் நதிக்கரையில் ||
கையைத்தான் மெல்லப்பிடித்தான் |
கட்டியணைத்தான் | முத்தம்கொடுத்தான்||
(வெண்ணிலவே)

2. முதலை உண்டபாலனை |
மீட்டுவந்து மனம் |
மகிழக்கொடுத்தான் ||
மிக்கபக்தர்குசேலர் கந்தை அவல் |
சித்தம்மகிழ்ந்துண்டு | செல்வம் கொடுத்தான் ||
நிதமுமுருகுமெனைக் கைவிடல் தகுமோ |
நீலவண்ணன் வந் | தணையாவிடிலோ ||
நானினித்தாளேன் நல் தேன் நிலவே |
இக்கணமே வரச் |செய்தி டுவாயே || (வெண்ணிலவே)

பாடல் 124

இராகம்: நடபைரவி    ஆ- ஸரிகமபதநிஸ்
தாளம்: ஆதி    அ- ஸ்நிதபமகரிஸ
(20வது மேளகர்த்தா)

பல்லவி

;பச்சை எழில்கிள்ளையே | ;பவள | வாய்திறந்து ||
;இச்சையாய் எனக்காக | ;இனிதாக | வேஉரைப்பாய் ||

அனுபல்லவி

;நச்சரவணிந்தாலும் | ; நற்கரு | ணைஉடையான் ||
;நாதன் அம்பலவாணன் | ;சன்னிதிக்கு | நீசென்று || (பச்சை)

சரணம்

இரவுபகலாக | மனதுமிக வாடி ||
வரும் வழியை நாடி | நிதமுமே | ;தே . . , டி ||
உருகியே . . . ; மலர் | அணையிலே | ; ; கண்ணீர் ||
பெருகியே விழியில் | அருவியே | :; ;; ||

குதித் தோடவே ;; ;; | நறுங் கனியோடு | பால்உ ணவெலாம்||
கசப் பாகவே ;; | தென்ற லோடுநிலா | குளிர்ந்தபன் நீரும்||
நெருப் பாகவே வெறுப் பாகவே |
கையில் வளைகழர | மெய்யில் பசனைஎழ ||
ஒருத்தியுன் னைநிதம் உளமதில் கொண்டாள் |
விருப்பு டன்வந்து | காத்திடு வாயென்று || (பச்சை)

பாடல்: 125

இராகம் சாரங்கா
தாளம் ரூபகம்

ஆ· ஸரிகமபதநிஸ்
அ- ஸ்நிதபமரிகமரிஸா

பல்லவி (65வது மே. க. ஜன்னியம்)

ப்ார்வ தி. . | ;பா . . ;க . . . னே ||
பர மேஸ் வர | னே ;; ;; ||

அனுபல்லவி

சீர் மிகு சிவ | லோ கநா தனே ||
சிந்தை கனிந்தருள் புரிவாய் |
சந்தத மும்தொழு தேனே || (பார்வதி)

சரணம்

ஆ லமுண் ட | நீ லகண் டனே ||
அரி அயன் அடி | முடி தேட நின்றாய் ||
கா லகா லனே | கருணாநி தியே ||
கொடும்வினை நீங்கிடச் செய்தே |
அடிமலர் தந்திடு வாயே || (பார்வதி)

பாடல்: 126

(கதாப்பிரசங்கம்)

## அபிராமி அம்மையின் அருள்

இராகம் - ஹரகரப்பிரியா
தாளம் - ஆதி

ஆ - ஸரிகமபதநிஸ்
அ - ஸ்நிதபமகரிஸா
(22வது மேளகர்த்தா)

பல்லவி

;அமுதகடேஸ்வர | னே . . . அரனே ||
;அன்னை அபிராமி | யோடு அருள்புரியும் ||



அனுபல்லவி

;நமபயம் நீக்கிநல் | ;வாழ்வு தரும் நாதனே ||
நற்றவம் புரி மார்க்கண்டனுக்காக |
அற்புதமாய் வந்து எமனை உதைத்தனை || (அமுத)

சரணம்

;காலகாலபரனே | ;திருக்கடவூரானே ||
;கோள்களின் வலிநீக்கி | ;கொடும்வினை தீர்ப்பவனே||
;ஆல முண்டகண்டனே | ;அன்பர்க்கெளியனே ||
அரிஅயன் அடிமுடிதேடியுங்காணா |
அனல்வடிவாகிய ஐயனே மெய்யனே || (அமுத)

பாடல் 127

இராகம் : கௌரிமனோகரி
தாளம் : ஆதி

ஆ. ஸரிகமபதநிஸ
அ. ஸ்நிதபமகரிஸ
23-வது மேளகர்த்தா

பல்லவி

அபிராமியேதா | யே ;அன்|பு கொண்டருள் ||
அமுதீசரின்பாகந் | தனிலேஇ| னிதுறையும் ||

அநுபல்லவி

;உபயமலரடியே | ;உறுதுணை|யெனத்தொழுதேன் ||
உலகிலச்சம் நீக்கியே |
உவந்து நின்பாதபங்கயம் தருவாய் || (அபிராமியே)

சரணம்

;கொடிய எமன்பாசம் | ;விசமார்க்|கண்டனுக்காய் ||
;குதித்தையனுடன்கலந்தே | ;அந்தக|னை உதைந்தாய் ||
;அடியவனென் சிந்தையில் | ;அமர்ந்த பராபரையே ||
;கடவூரினிலே என்றும் |
கருணையோடிலங்கு|| கௌரிமனோகரி || அபிராமியே)

பாடல்: 128

இராகம்: அடானா ஆ- ஸரிகமபநிஸ்
தாளம்: ஆதி அ- ஸ்நிஸ்தாபமபகாரிஸ
(29-வது மே. க. ஜன்னியம்)

(கதாப்பிரசங்கம்)

## சிறுத்தொண்டர்

பல்லவி

சோதனை செய்திடவேவந் / தார் ;; / ;சிவனார் //
;சிறுத் தொண்டனார் அடியார்க் / ; கமுதளிக் // கும் திறத்தை

அனுபல்லவி

;பாதிமதிகங்கை / ;அரவுஅனல் உடுக்கை //
;பங்குறைமங்கையொடு / ; மான்மழு வும் இன்றியே //
(சோதனை)

சரணம்

;கரியதிருமேனியில் / ;நீற்றினெழிலோடு //
;கண்கள் சிவந்திலங்கக் / ; கையிற்திரி//சூலமும் //
;சுருண்டுதிரிந்தசடை / ;அசைந்து அழகுசெய்யச் //
சிந்தனை செய்பவர் புந்தியில் உறைபவன் /
விந்தைகள் செய்பவன் வயிரவவடிவில் / (சோதனை)

பாடல் 129

இராகம்: மோகனம் ஆ. ஸரிகபதஸ்
தாளம்: ஆதி அ. ஸ்தபகரிஸ
28-வது மே.க. ஜன்னியம்

பல்லவி

;அரியசெயலைச்செய்தார் / கள் அரனில் அன்பால் //
;அடியவர்க் கமுதூட்ட / ;அருள்வயமாகி நின்றே //

அனுபல்லவி

;உரியநல்முறைப்படியே / ;நீராட்டி . . . //
;உலகோர் அறியாவண்ணம் / ;ஒருபுறம் கொண்டு சென்று //
(அரியசெயலை)

சரணம்

;தாயார் தன்மடிதனிலே / ;தனயனைப் பிடித்திருக்க //
;தன்னிகரில்லாக்குழந்தை / ; முகமது மலர்ந்திருக்க //
;வாயால் நல் ஐந்தெழுத்தை / ;ஓதும் சிறுத்தொண்டனார் //
வாளினாலே சீராளர் தன்னையே /
தானரிந்தனர் உலகை வென்றவர் // (அரிய செயலை)

▲ ▲



பாடல் 130

(கதாப்பிரசங்கம்)

## கண்ணப்பர்

இராகம், சிம்மேந்திரமத்திமம் ஆ: ஸரிகமபதநிஸ்
தாளம்: ஆதி அ; ஸ்நிதபமகரிஸ
(57வது மேளகர்த்தா)

பல்லவி

;அழகினை உடையது / ;காளத்திமலையே //
;அருகினில்பொன் முகலி / ;ஆனந்தமாய்த்துள்ளி ஓடும் //

அனுபல்லவி

;தொழுபவர்க்கருள்புரியும் / ;குடுமித் தேவரே //
;தோகைமயில் ஆடக்குயில் / பாடிட அங்கே உறையும்
(அழகினை)

சரணம்

;மகிளோடு கொன்றையும் / ;மலர்ந்து பூச்சொரிந்திடும் //
;மாருதம் நறுமணத்தை / ;எங்குமே பரப்பிடும் /
;பகைமறந்தே அரியும் / ;ஆனையை அணைத்திடும் //
புள்ளிமானினங்கள் புலிகளோடிணைந்து /
பொன் முகலிதன்னில் நீரருந்திடும்// (அழகினை)

பாடல் 131

இராகம்: சிவரஞ்சனி ஆ- ஸரிகபதஸா
தாளம்; ஆதி அ- ஸாதபகரிஸ
(22வது மே. க. ஜன்னியம்)

பல்லவி

காளத்தி ஈசனைக்கண் / டார் ;/ திண்ணனார் //
;கசிந்துருகி உருகிக் / ;கன்றாவினை நிகர்த்தார் //

அனுபல்லவி

;நாளும் முன் செய்ததவம் / ;வந்து கூட்//டிடநெஞ்
சங்கவர்ந்த நம்பிரியா / என்றே அணுகிநின்றார் // (காளத்தி)

சரணம்

;காதல் மிகுந்திடக்கண் / ணீர் வெள்ளத்தைச் சொரிந்தார்//
குணமெலாம் வேறுபட்டார் / ;கரந்தனைக் கூப்பிநின்றார் //
பாதமே காணமாலுமே ஏன /
மாகியே தேடி வாடியே மீள //
பங்கயம் உறை அயன் திங்களும் உறைமுடி /
கண்டிடு நினைவது மங்கிடவடிவுயர் // (காளத்தி)

▼ ▼

பாடல் 132

இராகம்- மோகனம் ஆ- ஸரிகபதஸ்.
தாளம்- ஆதி அ- ஸாதபகரிஸ
(28வது மே க. ஜன்னியம்)

பல்லவி

காளத்தி அப்பர் திண்ணர் / ;கையைப் பிடித்தார் //
கருணைபொங்கவே நில்லுகண்ணப்ப /
நில்லுகண்ணப்ப என்று விரைந்தே //

அனுபய்லவி

நாளும்; பூசைசெய்சிவ / ;கோசரியார் வியக்க //
;நான்முகன் முதலானோர் /;கற்பகப்பூச் சொரிய //
(காளத்தி)

சரணம்

;அருந்தவம் செய்வோர்க்கும் / :அரிதான பரமன் //
;அன்புக்கு எளியனாய் / ;அம்மையுடன் தோன்றியே //
;பெருமன்பு என்மேல் வைத்தாய் / மைந்தனே நீ என்றும் //
புந்திமகிழ்வொடு என்வலப் பக்கத்தில் //
நின்றிடுவாயென நல்வரமீந்தனன் // (காளத்தி)

பாடல் 133

(கதாப்பிரசங்கம்) **தக்கன் கர்வபங்கம்**

இராகம்; ஹரகரப்பிரியா ஆ- ஸரிகமபதநிஸ்
தாளம்; ஆதி அ- ஸநிதபமகரிஸ
(22வது மேள கர்த்தா

பல்லவி

;வீரபத்திர னுதித் / தார் நெற்றிக்கண்ணிலே //
;வீரபத்திர னுதித் / தார் ;; ;; ;; //

அனுபல்லவி

;ஆரமழகு செய்யும் / ; ஆயிரம் தலைவிளங்க //
;ஆயுதமேந்து மிரண் /டாயிரம் கரத்தோடு // (வீரபத்திரன்)

சரணம்

;கண்கள் மூவாயிரமும் / ;கனற்பொறியைச் சிந்த //
;காலை வைக்கும் ஓசை / ;இடியெனவே முழங்க //
;அண்டமெலாம் குலுங்க / ;அமரரெல்லாம் நடுங்க //
;ஆற்றலெல்லாம் விளங்கச் / ;சீற்றமுகத்துடனே //
(வீரபத்திரன்)



பாடல் 134

(கதாப்பிரசங்கம்) **மகிஷாசுர சங்காரம்**

இராகம்; ஹரகரப்பிரியா ஆ; ஸரிகமபதநிஸ்
தாளம்; ஆதி அ. ஸாநிதபமகரிஸ

பல்லவி (22வது மேளகர்த்தா)

பாதம் பணிந்தோம் அம் / மா பராசக்தியே //
;பரிந்து வந்தே காப்பாய் / ;பார்வதியே நித்தமே //

அனுபல்லவி

;பேதம் பலவானாய் / ;போகம் தனில் ஒளிர்வாய் //
;வேதன் பங்கில் உறைவாய் / ;கீதம்பாட அருள்வாய் //
(பாதம்)

சரணம்

;அனைத்துலகுயிர்க்கும் / ;ஆதாரம் நீ யன்றோ //
;அன்பரின் துயர்நீக்கி / ;அணைப்பவள் நீயன்றோ //
மனமே மகிழ்வுறவே வதனமலர் /
அழகாய் மலர்வுறவே முறுவலொடு //
விழியே கருணையினால் பெருமைமிக /
வருவாய் விரைவுடனே இதுசமயம் // (பாதம்பணிந்தோம்)

பாடல் 135

இராகம்; வசந்தா ஆ ஸமகமதநிஸ்
தாளம்: ஆதி அ ஸ்நிதமகரிஸ
(17வது மே. க ஜன்னியம்)

பல்லவி

;சுந்தர வடிவோடு / ;வந்தாள் அற் புதமாக //
;சுரர் மனம் மகிழ்வுற /
வே ; ; இடர் // விலகிட அருள்புரி //
பரை ×

அனுபல்லவி

;அந்த மாதியில்லாள் / ;அகிலமெங் / கும் நிறைந்தாள் //
;அனைத்துயிர்க்கும் தாயா /
னாள் ; ; உமை / சங்கரி சூலினி//
மிகு \ ×
(சுந்தர)

சரணம்

;சூலம் வாள் தண்டு அம்பு / ;வில் சக்க/ரம் வச்சிரம் //
;மாலைவேல் மதுக்கிண்ணம் / ;பாசம் க|தை பலவும்//
சீலமாய்த் தாங்குகின்ற / ;மூவாறு / கரங்கொண்டாள் //
;சிவன் வாம பாகத்தமர் /
வாள்; நிதம் / தொழுபவர் உள முறை //
சிலை ×
(சுந்தர)

படல் 136

## (கதாப்பிரசங்கம்)
## காலனை வென்ற பாலன்

இராகம்- சிவரஞ்சினி — ஆ- ஸரிகபதஸ்
தாளம்- ஆதி — அ- ஸ்தபகரிஸ
(22ன் ஜன்னியம்)

பல்லவி

காசி விஸ்வநா / தா கருணை புரி //
;கன்னி விசாலாட்சி / ; அம்மையுடன் உறையும் //

அனுபல்லவி

;ஈசனே நின்பூசை / ;என்றும் மறந்தறியேன் //
;இரும்போ நின்னிதயம் / ;விரும்பும் வரம் ஈவாய் //
(காசி)

சரணம்

;பாத கமலந்தனைப் / ;பணிந்திடும் அடியவர் //
;பாரினில் இடர்ப்படல் / ;தகுமோ ஐயா //
வேதனே நாதரூபனே ஆதி /
நாதனே ஆடுபாதனே சோதி //
அற்புத தற்பரசிற்பர முற்பவ /
மற்றிட முற்படு முத்தம நித்திய //
(காசி)

பாடல் 137

இராகம்: ஹரகரப்பிரியா — ஆ: ஸரிகமபதநிஸ்
தாளம்: ஆதி — அ: ஸ்நிதபமகரிஸ
(22 வது மேளகர்த்தா)

பல்லவி

ஆதாரம் நீயே ஐ / யா காசிநாதனே //
;அன்பர்க்குகிரங்கு விசா / ;லாட்சி பாகா வேதனே //

அனுபல்லவி

பாதாம்புயம் பணிந்தேன் / ;பரிந்தருள்வாய் போதனே //
;பரமனே பக்தர்கள் / ;சித்தமுறை நேயனே //
(ஆதாரம்)

சரணம்

;மணிகர்ணிகை தனிலே / ;மகிழ்ந்துறையும் ஈசனே //
(ப ;மலரயன் அரிகாணா / ;மாண்புமிகு ரூபனே //



அணியாய் அரவுடனே பிறைநதியும் /
சிரமாலையும் அழகாய்ப் புலியுடையும் //
அனல்மான் துடிபடையே திரி அயிலும் /
அடிகீழ்முயலகனும் திகழுபர // (ஆதாரம்)

▲ ▲

பாடல் 138

இராகம்: அடானா — ஆ- ஸரிமபநிஸா
தாளம்: ஆதி (திஸ்ரகதி) — அ- ஸ்நிதாநிபமபகாரிஸ

பல்லவி

பக்தர்க்கருள் சித்தன் அனல் கக்கும் நுதல் விழியான் /
பற்றும் சிவலிங்கத்திலிருந்தே வெளிவந்தான் //

அனுபல்லவி

மத்தம்மதி நதியும் முடி தனிலே அணிபெருமான் /
அச்சம் தவிரென்றே மிகு அன்போடு உரைத்தான் //
(பக்தர்க்கருள்)

சரணம்

மகிசத்தினில் அமர் அந்தகன் வலி கெட்டிட வினையால் /
முடிசட்டெனத் தரைபட்டுடன் பொடிபட்டிட விரைவாய் //
அகிலத்துயிர் அருள் பெற்றிட உதவும் இடதடியால் /
உதைவிட்டனன் மதிகெட்டெட மன்உயிர்விட்டன் னுடனே //
(பத்தர்க்கருள்)

பாடல் 139

▲ ▲

## (கதாப்பிரசங்கம்) மாணிக்கவாசகர்

இராகம்: பாகஶ்ரீ — ஆ- ஸகமதநிஸ்
தாளம்: ஆதி — அ- ஸ்நிதநிபமகமரிஸ
(22வது மே.க. ஜன்னியம்)

பல்லவி

;செந்தமிழ்த்தாய் செழிக்கும் / ;பாண்டிநாடதனில் //
;சீர்மிகு திருவாத / ;வூரர் பிறந்தார் //

அனுபல்லவி

;சுந்தர வாசகத்தைப் / ;பாடிச் சைவம் வளர்க்கச் //
;சோமசுந்தரரது / ;அருளினாலே // (செந்தமிழ்)

சரணம்

;சம்புபாதாசிரியர் / ; சிவஞான வதியும் //
;சிந்தைகளிக்க வந்தார் / ;சிவனடி போற்றவந்தார் //
;நம்பிஈசன் பாதம் / ;கும்பிடுவோர் உலகில் //
இன்பமடைந்திட இன்னலை வென்றிட /
அன்பிலுயர்ந்திட அறவழி நின்றிட // (செந்தமிழ்)

▲ ▲

பாடல்: 140

இராகம் மோகனம் ஆ. ஸரிகபதஸ
தாளம் ரூபகம் அ- ஸ்தபகரிஸ

பல்லவி (28வது மே. க ஜன்னியம்)

;குருந்தமர நிழலில் / ;குருவடிவாய் இருந்தான் //
;அருந்தவம் செய்வோர்க்கு / ;அருள்புரியும் பரமன் //

அனுபல்லவி

;பரிந்து சனகர்முதல் / ;நால்வருக்காக அன்று //
;இருந்து கல்லாவின் கீழ் / ;உபதேசம் செய்தவன் //

(குருந்த)

சரணம்

;கையிலே சிவஞான / ;போதநூலே விளங்க //
;கழுத்திலே சிவமணி / ;கவினுறவே துலங்க //
;மெய்யிலே வெண்ணீறு / ;பொலிவுடனே இலங்க //
;மேன்மையுறு கணங்கள் / ;சீடர்களாய் வணங்க //

(குருந்த)

பாடல்: 141

இராகம்; வசந்தா ஆ- ஸமகமதநிஸ
தாளம்; ஆதி அ- ஸ்நிதமகரிஸ

பலல்வி (17வது மே. க.ஜன்னியம்)

;திருவடி தீட்சை செய் / தான் இறைவன் //
;திருவாதவூரர் முன்பு / ;செய்தமாதவத்தாலே //

அனுபல்லவி

;அரிமுன்பு தேடியே / ;அறியாக் கமலபதம் //
;அன்புக்கு எளிதாகி / ;ஆனந்த நிலைதரவே //

(திருவடி)

சரணம்

; இமையவர் மலர் சொரிந்தார் / ; ரிஷிகளடி பணிந்தார் /
;பூதர்கணநாதர் புகழ்ந்து நின்றே மகிழ்ந்தார்
அம்பலந்தன்னில் செஞ்சிலம் பசையக /
கும்பிடும் தொண்டர் கண்டுமே மகிழத் //
தச்ஜொணு தகஜொணு தாதரிகிடதக /
தளாங்கு தோமென நடமிடுசிவபரன் //

(திருவடி)



பாடல் 142

## (நாட்டிய நாடகம் — உருக்மாங்கதா)

இராகம் - சிம்மேந்திரமந்திரம் ஆ- ஸரிகமபதநிஸ்
தாளம் - ஆதி அ- ஸ்நிதபமகரிஸ

பல்லவி (57வது மேளகர்த்தா

திருமாலின் திருவடி / ;தனைத்தொழுவோம் //
;தீவினைகள் அணுகாது / ;தினமும்அன்பரைக் காக்கும் //

(திருமாலின்)

அனுபல்லவி

;அரவணை தன்னிலே / ;அறிதுயில் கொள்ளுவான் //
அங்கிங்கெனாது எங்கும் நிறைந்தான் /
அற்புதங்காணப் பற்பல செய்வான் // (திருமாலின்(

சரணம்

;மண்ணுலகந்தனை / ;ஓரடியாய் அளந்தான் //
;மாபலியிடம் முன்பு / ;மூவடிமண் கேட்டான் //
;எண்ணமெல்லாம் அறிவான் / ;என்றும் அருள்புரிவான் //
எழில் திகழ்ந்திடும் நீல மேனியன் /
திருமகள் தலைவன் மலைமகள் சோதரன் //

(திருமாலின்)

பாடல் 143

## (நாட்டியநாடகம் மீனாட்சிகல்யாணம்)

இராகம் - சிந்துபைரவி ஆ - மபதநிஸ்ரிக்ம
தாளம் - ஆதி அ · க்ரிஸ்நிதபமகம

(10வது மே. க. ஜன்னியம்)

பலலவி

;அற்புதம் நிறைந்தது / ;திருஆலவாய் இறைவன் //
;அறுபத்து நான்குதிரு / ;விளையாடல் செய்ததாலே //

அனுபல்லவி

;முற்பவம் தனைநீக்கும் / ;முதல்வன் சுந்த ரேசன் //
மீனாட்சியம்மையோடு / ;வீற்றிருந்தே காட்டும் //

(அற்புதம்)

சரணம்

;சக்திபீடத்துள் முதற் / ;பீடம் மதுரை அன்னை //
;சித்தியெல்லாம் தருவாள் / ;போகமோட்சம் தருவாள் //
;பக்திமிகுந்த நல்வித் / யாவதி ; தவத்தால //
;பிரியமகளாய்வர / ;அரியவரம் கொடுத்தே // (அற்புதம்)

பாடல்: 144

## (அருள்மிகு நயினை நாகபூஷணி அம்மன் பேரில்)

இராகம் - கர்நாடகதேவகாந்தாரி ஆ- ஸகமபநிஸ்
தாளம் - ஆதி அ- ஸ்நிதபமகரிஸ

பல்லவி (22வது மே. க. ஜன்னியம்)

;நயினையிலே அமர்ந்த | ;நாகபூஷணியே ||
;நாடித்துதிப்பவர்க்கு | ;நல்வரம் தருபரையே ||

அனுபல்லவி

;தயைமிகுந்தாய் நினது | ;தாள்பணிந்தேன் தாயே ||
;தாமத மின்றி வந்தே | ;அருள்புரிவாயே ||
(நயினை)

சரணம்

1. ;ஆழி அனுதினமும் | ;அலைக்கரத்தால் பணிந்தே ||
;அழகுசேர் நித்திலத்தை | ;அடிமலரில் குவிக்க ||
;வாழி வாழி என்று | ;சங்கமொலித்திடவே ||
வையமகளும் தொழ | ;வாழ்ந்திடுபவளே || (நயினை)

2. ;சந்ததி இல்லை என்று | ;நொந்து வருபவர்க்கு ||
;சிந்தைமகிழ் மைந்தரைத் | ;தந்திடும் சுந்தரியே ||
;விந்தைபல காட்டி | ;அன்பர் உள்ளம் உறைந்தாய் ||
;வந்துவினை தீர்ப்பாய் | ;சந்ததமும் காப்பாய் || (நயினை)

3. ;நாகம் நல்மலரேந்தி | ;வந்துனையே முன்னாள் ||
;நாளுமே போற்ற நின்ற ; நாயகியே பரையே ||
;பாகம் கொள் பரனோடு | ;பாரெல்லாம் காப்பவளே |
பரிபூரணியே கிருபாகரியே |
அரிசோதரியே நீயே கதியே || (நயினை)

பாடல் 145

## தமிழ்நாடு திருச்சிராப்பள்ளி அருள்மிகு தாயுமானவர் பேரில்

இராகம்: கானடா ஆ: ஸரிபகாமதநிஸா
தாளம்: ஆதி அ: ஸ்நிபமகாமரிஸ
(22வது மே.க. ஜன்னியம்)

பல்லவி

;சிந்தையே உருகுதை | ;/யா; சிவனே ||
; அந்தமில்லாதவனே | ;அருள் வடிவானவனே |



அனுபல்லவி

;விந்தையைக் கண்டிடவே | ;தாயுமாகிவிரைந்தாய் ||
;வந்து ரத்னா வதிக்கு | ;மகப்பேறுப் பணிபுரிந்தாய் ||
(சிந்தையே)

சரணம்

1. ;காவிரி வெள்ளமதால் | ;வரமுடியாது நொந்து ||
;பூவடி தொழுதாயின் | ;உளமறிந்துதவி செய்தாய் ||
;ஆவலாய் அங்குவந்த | ;தாயும் மற்றெல்லோரும் ||
;அதிசயம் கொண்டிடவே | ;காட்சிதந்த அரனே ||
(சிந்தையே)

2. ;தாயான ஈசனே | ;அன்பரின் நேயனே ||
;மாயா உலகமிதில் | ;மிகுதுணை நீதானே ||
வாயாரவே துதித்தேன் | ;விரைந்தருள் தருவாயே ||
திருச்சிராப்பள்ளி தன்னில் அமர்ந்தவனே |
மருத்துவம் பார்த்து மகிழ வைத்தவனே || (சிந்தையே)

▲ ▲

பாடல் 146

## (தமிழ்நாடு உறையூர் அருள்மிகு வெக்காளி அம்மன் பேரில்)

இராகம்: ஆனந்தபைரவி ஆ- ஸரிகமபதபஸா
தாளம்: சதுஸ்ரஏகம் அ- ஸ்நிதபமகரிஸ

பல்லவி (20வது மே. க. ஜன்னியம்)

வெக்காளியே அம் /மா ; நின்னை நிதமும்||
முக்காலமும் தொழுதேன் | எக்காலமும் காப்பாய் ||

அனுபல்லவி

முக்கண் அரனுடனே | மிக்க நடம்புரிந்தாய் ||
எக்கண்களும் களிக்கத் | திக்கனைத்தும் போற்றும் ||
(வெக்காளியே)

சரணம்

1. பண்ணிய பவச்செயலால் | மண்மாரிதான் பெய்யக் ||
கண்மாரியே சொரிய | மக்கள் விரைந்தோட ||
அன்னை நீ அகம் கனிந்து | அக்கணமே தான் தோன்றித் ||
தண்மை நிறை சொல்லதனால் | மக்களை நிறுத்தினாய் ||
(வெக்காளியே)

2. திரிசூலம் கையேந்தி | மகிஷனை அழித்தாயே ||
வருதீவினைமாள | வாழ்வில் நலம் தருவாயே ||
பரிபூரணி நீயே | கிருபாகரி தாயே ||
வருவாயே பரிவோடு | அருளே நீ தருவாயே || (வெக்காளியே)

▲ ▲

பாடல் 147

## (அருள்மிகு மதுரை மீனாட்சியம்மை பேரில்)

±
ஆ- ஸரிமபநிஸ்ா

இராகம்: தேஸ் அ- ஸ்நிதபமகரிஸா

தாளம்: ஆதி (28வது மே. க. ஜன்னியம்)

பல்லவி

;சோமசுந்தரர் கொஞ்சு / ;மீனாட்சி தாயே //
;நாமமோதிக் கெஞ்சினேன் / அருளீகுவாயே //

அனுபல்லவி

;தேமதுர மொழியாய் / ;திருமதுரை உன்னாட்சி //
;தாமதம் செய்யாமல் / தந்திடுவாய் நின் காட்சி //
(சோமசுந்தரர்)

சரணம்

1. ;மலையத்துவசன் பெற்ற / ;மணி மரகதமே //
;மனதில் நிறைந்த தென்றும் / ;உன்மலர்ப்பதமே //
;தலம்பல வற்றிலும் நீ / ;செய்வதற்புதமே //
;தாயே நீயே தஞ்சம் / ;என்தனுக்கு நிதமே //
(சோமசுந்தரர்)

2. ;உலகிலுன் அருளுக்கு / ;இணையேது அம்மா //
;உணராதிருந்து வீணில் / ;பேசிடுவார் சும்மா //
;பலகற்றும் வேண்டுவது / ;உன் அருள் என் ஆன்மா //
;பழவினை நீக்கி என்னை / ;ஆண்டிடுவாய் அம்மா //
(சோமசுந்தரர்)

3. ;ஐயனும் நீயும்தான் / ;எனக்கருந்துணை யம்மா //
;அனுதினமும் விழிநீர் / ;அபிசேகம் தானம்மா //
;மெய்யுணர்வால் உயரச் / ;செய்திடுவாய் அம்மா //
மேதினி தனிவோங்க / ;வைத்திடுவாயம்மா // (சோமசுந்தரர்)

▲ ▲

பாடல் 148

இராகம்: கானடா ஆ - ஸரிபகாமதநிஸ்ா

தாளம்: ஆதி அ- ஸ்நிபமகாமரிஸ

(22வது மே. க. ஜன்னியம்)

பல்லவி

;நினைந்து நினைந்து உள்ளம் / உருகுதம்மா கண்ணீர் //
;நனைந்து நனைந்து வெள்ளம் / பெருகுதம்மா உமையே //



அனுபல்லவி

;அனந்தமனந்தமாய்ப் / ;பிறவிகள் தந்தாய் //
;புனைந்து புனைந்துபல / ;வடிவில் நின்றேன் இங்கு //
(நினைந்து)

சரணம்

1. ;உளன்று உளன்று உள்ளத் / ;தெளிவின்றி அலைந்தேன் //
;கழன்று கழன்று போன / ;உடல்கள் எத்தனையோ //
;எழுந்தெழுந்தே பிறவிக் / ;கடல்தாண்ட முயல்கின்றேன் //
;விழுந்து விழுந்தழுந்த / ;வைக்கும் வினை நீக்கிடுவாய் //
(நினைந்து)

2. ;பரந்து பரந்து நிற்கும் / ;உலகமதில் நான் //
;சிறந்த சிறந்த செயல் / செய்வதென்றோ அம்மா //
;பிரிந்து பிரிந்து செல்லும் / ;உயிர்களெல்லாம் மீண்டும் //
;திரும்பித் திரும்பிப்புது / ; உடல்நுழையும் உலகில் //
(நினைந்து)

3. ;மருந்து மருந்து உன்தன் / ;பாதம் ஒன்றே தான் //
;இரங்கி இரங்கி எனக் / ;கீந்திடுவாய் மகிழ்வாய் //
;அருந்தவர் உளமுறை / ;உமையவளே நீ //
;விரும்பிடும் அரனுடன் / ;வந்தெனை யாள்வாய் //
▲ ▲
(நினைந்து)

பாடல் 149

## (தமிழ்நாடு வயலூர் முருகன் பேரில்)

இராகம்: பரஸ் ஆ- ஸமகமபதநிஸ்ா

தாளம்: ஆதி அ- ஸநிதபமகரிஸ

(15வது மே. க. ஜன்னியம்)

பல்லவி

;வயலூரில் இனிதமர்ந் / த; முருகையனே //
;தயைகூர்ந்தருள்புரி / வாய்; வேலையனே //

அனுபல்லவி

;அயலே செஞ்சாலியொடு / ;கமுகு வாழை திகழத் //
துயர் சேர்க்கும் வினைதீர்க்கும் / தீர்த்தம் கண்டே புகழ //
(வயலூரில்)

சரணம்

1. ;சரணம் என்றுனை அடைந்தேன் / ;பன்னிருகையனே //
;சஞ்சலம் தீர்த்திடுவாய் / ;செந்திரு மருமகனே //
;அருணகிரிக்கருள் செய் / ;ஆறுமுகத்தோனே //
;ஆறுபடை வீடுடையாய் / அம்பிகை மகிழ்சுதனே //
(வயலூரில்)

2. அமரரிடர்தீர்த்த / வா : ; வணங்கும் //
அன்பரின் உளம்கொண்ட / வா ; ; என்னையும் //
அடிமைகொண்டாயல்ல / வா ; ; என்றும் //
அருந்துணை நீயல்ல / வா ; ; . . ;; . ;; //
உமையாள் அரன்மகனே / வள்ளிதெய்வயானையொடு //
உனதாறு முகங்களில் / கருணை மிக விளங்க //
அமைந்த கரமீராறில் / வேலுடன் மற்றும் இலங்க //
அமர்ந்தே புள்ளிமயிலில் / விரைந்தே நல்வரமருள் //
(வயலூரில்)

பாடல் 150

## (தில்லை நடராசர் விருத்தம்)

அரவிந்த மலரடியை யழகாய்த் தினம்தூக்கி
ஆனந்த மானநடமாடு கோலன்
அரியயனு மறியாத சோதியாய் நின்றவன்
ஆதார மாய்உயிர்கட் கருளு சீலன்
திருஐந்தெழு த்தினைத் தினமோது மன்பரின்
தூயமன மலரிலே தங்கு கோலன்
தேவிஉமை பாதிபெற அர்த்தநா ரீசுவர
தேவாதி தேவனாய்ப் போற்று கோலன்
வருமந்த கன்பாச மதுகொண்டு உயிர்கவரு
வேளைதனில் விரைந்துவந் தருள்செய் வேதன்
வாசமிகு கொன்றையொடு தும்பைமதி யரவுநதி
விளங்குதிரு முடியுடைய விமல நாதன்
விரிகின்ற ஐந்தொழிலி லுலகங்க ளீடேற
விந்தையாய்ப் பலவடிவு கொண்டு நின்றான்
மலைமகளின் நேசன் எழில் மன்றிலுறை ஈசன் நட
ராசனடி மறவாது துதிசெய் மனமே

2. மாணிக்க வாசகரின் பாடல் தனைக்கேட்டு
மனமகிழ்ந்து திருக்கரத்தா லெழுதி வைத்தான்
மாகாளி மதியாது முன்னின் றெதிர்த்தாட
மலரடியை மேல் தூக்கி நாண வைத்தான்
ஈனநிலை நீக்கியே உயர்வான நிலைசேர
அன்புமிகு நந்தனுக் கருள் சுரந்தான்
இமையவர்கள் இடர்நீக்கி அமுதம் பெறச்செய்து
இன்னல்தரு நஞ்சதனைத் தானே உண்டான்



தேனொத்த நூல்செய்த சேக்கிழா ரும்வேண்டத்
திருவாக்கா லுலகெல்லாம் என ஓதினான்
தாள்நோகப் பரவையிடம் தூதாக வேசென்று
தாள்பணியும் சுந்தரரின் துயரம் தீர்த்தான்
ஞானத்தை அடைஉமா பதிசிவம் கவிபாடக்
கொடியேறு புதுமையைக் காட்டி நின்றான்
மலைமகளின் நேசனெழில் மன்றிலுறை ஈசன்நட
ராசனடி மறவாது துதிசெய் மனமே

3. பதஞ்சலியும் புலிமுனியும் பண்டைநாள் தில்லைதனில்
பண்ணுதவங் கண்டுமகிழ்ந் தாடல் செய்தான்
பாற்கடலிற் பள்ளிகொள்ளும் பரந்தாமன் கண்மலராற்
பூசைசெயச் சக்கரமும் பரிந்து ஈந்தான்
மதஞ்சொரியும் கரிபுலியின் உரிதனையே தானணிந்து
மான்சூல மெரிதுடிகை மீதிற் கொண்டான்
மாமுனிவர் நால்வருக்காய்க் கல்லாலின் கீழமர்ந்து
மாண்புறவே ஞானமது விளங்க வைத்தான்
இதம்பரவு மிசைவல்ல பத்திரனுக் காளாகி
இந்தனம் சுமந்தடிகள் நோகச் சென்றான்
இனிமைமிகு சாதாரிப் பண்கொண்டு பாடியே
ஏமநா தனுமஞ்சி ஓட வைத்தான்
பதம்பணியும் வந்திமிக மகிழ்வுறக் கூலியாளாய்ப்
பிட்டுண்டு மண்சுமந் தடியும் பெற்றான்
மலைமகளின் நேசனெழில் மன்றிலுறை ஈசன்நட
ராசனடி மறவாது துதிசெய் மனமே.

பாடல் 151 ▲ ▲

## அருள்மிகு நல்லைமுருகன்

### விருத்தம்

1. சுந்தரத் தோகைமயில் சந்ததம் தாங்கவே
சுற்றிவிளை யாடி வருவாய்
சக்திமிகு வேலினைக் கைப்பிடித் தேயன்பர்
சஞ்சலம் தீர்த்து /வைப்பாய்
புந்தியிற் களிமிகப் புதுமைகள் காட்டியே
புன்சிரிப் போடு நின்றே
புண்ணியம் செய்தவர் நண்ணியே நித்தமும்
பக்தியாற் பணிய வைப்பாய்

செந்தமிழ்த் தெய்வமே வள்ளியைச் சேரவே
சென்றுபல வடிவு மானாய்
சங்கரன் பங்கிலுறை சக்தியின் பாலநின்
செய்யதாள் போற்றி ஐயா
அந்தமில் லானந்த மதனையருள் நாதனே
அழகுவடி வான குமரா
அரிமருக பரமசுத அருள்பெருகு நல்லையமர்
ஆறுமுக முடைய குகனே.

2. நீறுபொலி கோலமது நெஞ்சினைக் கவரவே
நீள்விழிகள் கருணை காட்ட
நெடியகர மபயவர தக்கோல மாகவே
நினைப்பவர்க் கின்ப மீய
ஆரமணி சுந்தரமு மரையிலணி பட்டுடையு
மழகுசேர் மார்பி னோடு
அப் புயத் தாள்களைக் கண்டுமே யன்பர்கள்
அகம்குழைந் துருக வேதான்
சேருமிரு பெண்களொடு சிங்கார மாகவரு
சேந்தனே கார்த்தி கேயா
செய்குழக வேலஉயர் குறிஞ்சிநில வேந்தனே
சாமியே போற்றி ஐயா
ஆறுபடை வீடதனில் அழகுறத தங்கினாய்
அயன் செருக் கழித்த பரனே
அரிமருக பரமசுத அருள்பெருக நல்லையமர்
ஆறுமுக முடைய பிரனே.

பாடல் 152

## தசாவதாரம் (விஷ்ணு)

### விருத்தம்

1. வையமெலாம் காக்கின்ற வைகுந்த வாசனே
வனசமல ருறைதிருவைத் தாங்கிடும் மார்பனே
வெய்யஇர ணியனுடலை நரசிங்க வடிவமாய்
வெளிவந்து கிழித்துடன் உதிரம் குடித்தநீ
கையினிலே வெண்ணைதனை அள்ளி உண்ணும்போது
களவுதான் வெளியாக அஞ்சி நின்றாய்
உய்யநின் நதடிமலரை உளமதிலே கொண்டோம்
உமையவளின் சோதரா இரங்கி யருள்வாய்



2. மறைநான்கை யும்திருடி ஆழிதனி லொளித்த
மமதைமிகு சோமுகா சுரன் தனையே
பெருமச்ச வடிவாகச் சென்றே கொன்று
பிரமனுளம் மகிழ்வுறவே மீட்டு வந்தாய்
கிரிமந்த ரம்மத்தாய் வாசுகியே நாணாகக்
கொண்டுபாற் கடல்தனையே கடையும் போது
உருபெரிய கூர்மமாய்த் தாங்கியே நின்றாய்
உயர்கருணை யொடுநிதமும் காப்பாய் ஐயா

3. வாமனராய்க் காசிபரின் மகனாக வந்தாய்
விந்தையாய் மூன்றடிமண் பலியைக் கேட்டாய்
பூமிவிண்ணும் இரண்டே அடிமூன் றவன்காட்டப்
பாதம் சிரம்வைத்துப் பாதல மாளவைத்தாய்
பூமகளின் துயர்தீரச் ஜமதக்கினி மகனாய்ப்
பரசுரா மன்எனப் பாரில லவதரித்தாய்
காமதேனு வைக்கவர் கார்த்தவீ ரியனோடு
கபடரை அழித்தாய் கருணைகொண் டாளுவாயே.

4. பூமிதனை இரணியாக் கதன்என் பான்பெயர்த்து
பாதலத்திற் கொண்டுசென்று வைத்த போது
நாமகளின் தலைவ னயன்நின் னிடமேவந்து
நீசனின் செயல்கூற நீஉடன் வராகமாய்த்
தீமைபுரி அசுரனைச் சக்கரத் தாற்கொன்று
துயர்நீக்கிப் பூமகளை மகிழ வைத்தாய்
பூமிமிசைப் பலமிகுந்த பலராமன் என்றிடப்
படைகலப்பை ஏந்திநின்றாய் என்றும் காப்பாய்

5. தசரதன்கோ சலைமகிழும் மகனாய் வந்தாய்
துருவாசர் தவங்காத்தாய் ஜனகன்வில் லைமுறித்தாய்
இசைவான திருமகளாம் சீதையை மணம் செய்தாய்
இழிசெயல்செய் ராவணனைப் போரில்நெஞ்சங்கிழித்தாய்
நசையுறுமோ கினியாய் நின்றமிர்தம் பகிர்ந்தீந்தாய்
நம்இறையை மதியாத முனிவர் மயங்கநின்றாய்
அசுவமுகக் கல்கியாய் அங்கையினில் வாளேந்தி
அதர்மமழிந் திடவருவாய் அன்பரைக் காப்பவனே.

பாடல் 153

## அருள்மிகு கதிர்காம முருகன் பேரில்

இராகம் : சண்முகப்பிரியா — ஆ. ஸரிகமபதநிஸ்
தாளம் : ஆதி — அ. ஸ்நிதபமகரிஸ
(56-வது மேளகர்த்தா)

பல்லவி

;கதிர்காமத் தலத்தே | ;அமர்ந்த கந் ; ; தா ||
;கலியுக வரதா |
கார்த்திகேயனே கனிந்து வரந்தா ||

அனுபல்லவி

;துதிசெய்யும் அடியவரின் | துயர்தீர்ப்பவனே ||
;தினமுனைத் தொழுதேன் |
திருமால்மருகா | பரிபூரணனே|| (கதிர்காம)

சரணம்

;மாணிக்ககங்கைமலர் | ;வாரிவந் தே குவிக்க ||
;மாங்குயில் இசைபாட | ;மயில் இனங் கள் ஆட||
;ஆனைகள் அடிவணங்கி | ;நின்பணியே புரிய||
;அன்பருளம் மகிழ |
அனுதினமற்புதம் | காட்டிடு மய்யனே ||
உயர் × கதிர்காமத்தலத்தே.

▲ ▲

பாடல் 154

இராகம் ஆபோகி — ஆ. ஸரிகபமதஸ்
தாளம் ஆதி — அ- ஸ்தமகரிஸ

பல்லவி (22வது மே. க. ஜன்னியம்)

ஆலவாய் அர | னே; ; அங்கயர்க்கண்ணி ||
அன்புமணாளனே | ;அருள் செய்கு ணாளனே||

அனுபல்லவி

;காலகாலனே | ;கருணாகரனே||
;கடம்பவனநாதனே |
காட்சிதந்தடிமை | கொள்வாய் வேதனே || (ஆலவாய்)

சரணம்

பாதம் பணியும் அன்பர் | புந்தியுறை சீலனே ||
பாணபத்திரனுக்காய் | இசைபாடுகோலனே
;மாதவப்பேறுபெற்ற | ;காஞ்சனைமருகனே ||
மதுராபுரிவாசனே |
மங்களரூபனே எங்கும் பிரகாசனே (ஆலவாய்)

● ●



பாடல்: 155

இராகம்; தர்பாரிகானடா — ஆ- ஸரிகாமபதாநிஸ
தாளம்; ஆதி — அ- ஸ்நிபமகாமரிஸ
(22வது மே. க. ஜன்னியம்)

பல்லவி

;ஐயப்ப சாமியின் | ;அடிமலர் தனை ||
;அனுதினமும் தொழு/வாய் . . மனமே

அனுபல்லவி

;மெய்யடியார் தம்மை | ;நாளும் காப்பவன் ||
;மேலாம்நிலை தன்னை | மகிழ்ந்து ஈபவன் (ஐயப்ப)

சரணம்

;பூரணைபுட்கலை | ;மகிழ்மணாளன் ||
;புதுமைமிகுசபரி | ;மலையிலுறைபவன் ||
;நாரணன் சிவசுதன் | ;நல்லருள் புரிபவன்
;நயந்துபுலிதனிலே | அமர்ந்துவருபவன் || (ஐயப்ப)

▼ ▼

பாடல் 156

இராகம்; கேதாரகௌளை — ஆ- ஸரிமபநிஸா
தாளம்; ஆதி — அ- ஸ்நிதபமதரிஸ

பல்லவி (28ம் மே. க. ஜன்னியம்)

;நீயேகதியென்று | ;நிதமுய பாதம் பணிநதேன் ||
;நாயேனுக்குறுதுணை | ;வேறுண்டோ சொல்லையா ||

அனுபல்லவி

;மாயாஉலகிலே | ;மயங்கியே வாழ்ந்திடினும் ||
தாயும் நீதந்தையும்நீ | என்றுணர்ந்தேன் பொன்னையா ||
(நீயேகதியென்று

சரணம்

;பொன்னம்பலத்தில் நிதம் | ;நடமிடும் பாதனே ||
;கன்னிசிவகாமி உள்ளம் | ;களிப்புறும் நாதனே ||
;தன்னிகரில்லாத | ;தேவாதி தேவனே
தாரணிமேலெனை ஆண்டிடுவாயே ||
பூரணனே அரகிருபாகரனே || (நீயேகதியென்று)

▲ ▲

பாடல் 157

இராகம், ஆரபி — ஆ; ஸரிமபதஸ்
தாளம்; ஆதி — அ; ஸ்நிதபமகரிஸ
(29வது மே. க. ஜன்னியம்)

பல்லவி

;சரணம் சரணம் என்று | ;சந்ததமும் பணிந்தால் ||
;மரணஜெனனமில்லை | யே மனமே ||

அனுபல்லவி

;பெருகியே மூவாசைக் / கடலினுள் வீழாமல் //
;பரமனை உள்ளுள்ளே / ;கண்டுகண்டுருகியே //
(சரணம்)

சரணம்

1 ; மதிகங்கை அரவோடு / மலர்ந்த கொன்றை புனைந்து //
; மான்உடுக்கை சூலம் / ; மழுஎரிகையேந்தி //
; துதிசெய் வெண்ணீறு / ; திருமேனியில் இலங்க //
; தாண்டவம் நிதம்செய்யும் / ; ஆண்டவனை அன்போடு //
(சரணம்)

2. ; காலனை மார்க்கண்டற்காய் / ; உதைத்திட்ட காலனைக் //
; காளியுடன்நடனம் / ; ஆடியகாலனை //
; ஆலமுண்ட நீல / ; கண்டங்கொள் ரூபனை//
; அன்பர் சுந்தரருக்காய் / ; தூதுசெல் கோனனை// (சரணம்)

3. ; பரியாக்கி நரிதனைப் / ; பாண்டியற் கீந்தவனைப் //
; பிட்டுக்கு மண்சுமந்து / ; பிரம்படிபட்டவனைக் //
; கருணையுடன் தாயுமாய்ப் / ; பணிசெய்து காத்தவனைக் //
; காட்டில் ஏனக்குட்டிகள் / ; களிக்கப் பாலீந்தவனைச் //
(சரணம்)

▲ ▲

பாடல் 158

இராகம்: கர்நாடகதேவகாந்தாரி — ஆ- ஸகமபநிஸ்
தாளம்; ஆதி — அ- ஸ்நிதபமகரிஸ
((22வது மே. க.ஜன்னியம்)

பல்லவி

;எனக்கென்ன தெரியுமை / யாநல்லைக்குமரா//
;நின தருளாலன்றி / ;உனை நினைந்து பாட //

அனுபல்லவி

;வினைக்கேற்கவே பிறந்து / ;உழலும் சிறியேன் யான் //
;உனக்குஆளாகி என்றும் / ;உருகிநின்றே தொழுதேன் //
(எனக்கென்ன)

சரணம்

1- ;மாதவத்தோர் அறியும் / ;மாண்பு கொண்டவனே //
;ஆதரிப்பாய் என்னையே / ;அறிவிற்கலந்து நிற்பாய் //
;பூதலத்தோர்போற்ற / ;அருளைப்பொழிபவனே //
;புண்ணியா நின்முறுவல் / ;காட்சி என்றும் மறவேன் //
(எனக்கென்ன)



2. ;குறுமுனிக்குச் செந்தமிழ் / ;உரைத்தவனே குகனே //
;அருணகிரியார் திருப் / ;புகழில் மகிழ்ந்தவனே //
;விருப்பொடுகீரர்பாட / ;விரைந்து அருள்சுரந்தாய் //
;அவ்வைக்குக்கனி ஈந்தே / ;அருந்தமிழ்ப் பாகேட்டாய் //
(எனக்கென்ன)

3. ;கச்சியப்பர்பாட / ;அடியெடுத்தே கொடுத்தாய் //
;குற்றம்சொல் அவையோர்கள் /;வியந்தேற்க நூல்கொண்டாய்//
;பச்சைமயில் வேலின்றிக் / ;காட்சிஅங்கே கொடுத்தாய் //
;பைந்தமிழ்ப்புலவனே / ;குறிஞ்சிநில வேலையா //
(எனக்கென்ன)

● ●

பாடல் 159

இராகம்- கானடா — ஆ- ஸரிகமதநிஸ்ர
தாளம்- ஆதி — அ- ஸ்நிபமகாமரிஸா
(22ன் மே.க.ஜன்னியம்)

பல்லவி

மனம் இரங்கிவந்து / ;அருள்புரிவாயம்மா //
மலையரசன் மகளே /
மாலின் சோதரியே / மரகதவல்லியே //

அனுபல்லவி

தினம் உன்நாமமேதான் / ;துணையெனவே துதித்தேன் //
தூயமலரடியைச் சூட்டிவைப்பாயே /
துன்பமேயகல இன்பமே நிறைய// (மனம்)

சரணம்

1. ;ஆசைகளாற்பிறவி / ;அனந்தம் எடுத்து நொந்தேன் //
;ஆயினும் அன்பால் உன்னைத்/;தொழுதிடும் பேறுபெற்றேன் //
;ஈசனின் பாகமதில் / ;இனிது உறைபவளே //
இந்த உலகில்தவம் முற்றிட அருள்செய் /
அந்தமாதியிலா அங்கயற் கண்ணியே //
(மனம் இரங்கி)

2. ;பித்தன் என்றே உலகோர் / ;பேசிஇகழந்தாலும்//
;பெருமைதந்தே பலரும் / ;புகழ்ந்துநின்றாலும் //
;சித்தம்மயங்காது / ;உன்பணியேசெய்து //
ஜென்மப்பயனடைய வைத்திடுவாயே /
கன்னிகதிர்வேலன் அன்னை கௌரியே //
(மனம்இரங்கி)

3. ;நாற்பத்து முக்கோண / ;ஸ்ரீசக்கரசுந்தரியே //
;நாடித்தவம்புரிவார் / ;பெற்றிடும் பெருநிதியே //
;கூற்றுவன் தனை உதைத்தாய் / ;காலகாலிசூலியே //

கூவிஎமன் பாசம் வீசும்போது வந்து /
தாவித்தடுத்துனது தூய பதத்தில் வைப்பாய் //
(மனம்இரங்கி)

பல்லவி

1. கா, கா, ரீ ஸா,ஸ நீநீ / ;ஸஸாரிரீ / கா, கா, கா //

மனம்இ.. ரங்கிவந்து அருள்புரி வாயம்மா
2. கா, கா, ரீ கா,மா ரீ / ;ஸஸாரிரீ / கா, கா, கா //

மனம்இ ரங்கிவந்து அருள்புரி வாயம்மா
3. கா, கா, பம காமரிஸாநீ / ;ஸஸாரிரீ / ரீ.பா, கா //
மனம் இ.. ரங்கிவந்து அருள்புரி வாயம்மா
;கமாதநீ தா, த நீஸ்ா /
மலையர சன்மகளே
ஸ்ாஸ்ஸ்ாஸ்நித மபநிபகாமரி //
மாலின்சோதரியே மரகதவல்லியே

அனுபல்லவி

×
1. மா தா; நீ ஸ்ா, ஸ் ஸ்ாஸ்ா / ;ஸ்ரீ·ஸ்ஸ்ா ஸ்ா,ஸ் நீஸ்ா //
தினம் . உன் நாம மேதான் துணையென வேதுதித்தேன்
2. மாதா ; நீ ஸ்ா,ஸ்ஸ்ாஸ்ா / ;ரி·க்ாரி·ஸ்ா ஸ்ா,ரி·ஸ்நிபா //
தினம் ' உன் நாமமேதான் துணைஎன வேதுத்தேன்
நீநி பமகமத மததநி ஸ்ாஸ்ா /
தூய மலரடியைச் சூட்டிவைப்பாயே
ஸ்ரி·ஸ்ஸ்ாநிபம காமகாமகரி //
துன்பமேயகல இன்பமேநிறைய (மனம்இரங்கி)

சரணம்

;கா காரீ ஸா,ஸ ஸஸா, / ;ஸஸாரிரீ காகா ரீஸா //
ஆசைக் ளாற்பி றவி அனந்தமெ டுத்துநொந்தேன்

2. ;கா காரீ ஸா,ஸஸஸா, / ;ஸஸாரிரீ / காமா காகா //
ஆசைக ளாற்பிறவி அனந்தமெ டுத்துநொந்தேன்
;ரீ காரீ ஸாநீ ஸாஸா / ;ஸரீரீரி ; ரீ,ரிபகா, //

ஆயினும் அன்பால்உன்னைத் தொழுதிடும்பேறுபெற்றேன்
×
;மதா நிஸ்ர் ஸ்,ாஸஸ்ாஸ்ா / ;ஸ்ரீ ஸ்ஸ்ா / ஸ்ாஸ்ா நீஸ்ா //
ஈசனின் பாகமதில் இனிதுஉ றைபவளே
;மதாநிஸ்ா ஸ்ா,ஸ்ஸ்ாஸ்ா / ;ரி·க்ாரி·ஸ்ா / ஸ்ா,ரி' ஸ்நிபா //
ஈசனின் பாக மதில் இனிதுஉ றைப வளே



நிநிநிபமகமத மததநிஸ்ாஸ்ா
இந்தஉலகில்தவம் முற்றிட அருள்வாய்
ஸ்ரி·ஸ்ஸ்ாநிபம ககமகாமகரி //
அந்த மாதியிலா அங்கயற்கண்ணியே

● ● (மனம்இரங்கி)

பாடல் 160

×
இராகம்: பாகஸ்ரீ ஆ: ஸரிகமதநிஸ்
தாளம்: ஆதி அ: ஸ்நிதநிபமகமரிஸ
(22 வது மே.க. ஜன்னியம்)

பல்லவி

;தெல்லிப்பழைத்தலத்தில் / ;மகிழ்ந்துறையும் துர்க்கா //
;தேவிநின்பாதம்பணிந் / தேன். . ; எ / ழில்தங்கிடும் //

அநுபல்லவி

;வல்லிநின்பாதமதை / ;வணங்கிடு வோர்க்கு என்றும் //
;வையத்தில் நலமோங்க /
வாழ்வுதந்திடும் வீரச்செல்வியே (தெல்லிப்பழை)

சரணம்

;சூலிசயமகளே / ;சுந்தரி சண்டிகையே //
;சுரர்கள் என்றும்மகிழ / ;மகிசனைச் சங்கரித்தாய் //
;மாலின் நற்சோதரியே / ;மனமிரங்கி ஆதரி //
மாதவத்தோர்தொழுநீலி கௌரியே
தீதகற்றிநிதம் ஜெயமருள்வாயே // (தெல்லிப்பழை)

2. ;சிங்கத்தினில் அமர்ந்து / ;சிங்காரமாய் வருவாய் //
;சிந்தையில் அன்புகொண்டோர் / ;முந்தைவினை தொலைப்பாய் //
;எங்கும் நிறைந்திருப்பாய் / ; ஈரைந்துகரம் கொண்டாய் //
அந்தமாதியிலா அமரிகன்னியே /
விந்தைகாட்டியெனைக் கவருமன்னையே //
(தெல்லிப்பழை)

3. ;சக்கரம் வில் வேல்வாள் / ;சூலம் கரம் விளங்க //
;இக்கணமேவந்து / ;தரிசனம் தந்திடுவாய் //
;முக்கண்ணனின் சக்தியே / ;சங்கரிநாரணியே //
மாயவாழ்வுதனில் மறலி அணுகாது /
தூயதாளை என்மேற் சூட்டிவைப்பாயே //
(தெல்லிப்பழை)

× துர்க்காதேவி;- பத்துக்கரங்களுடையவரென்றும் பதினெட்டுக்கரங்களுடையவரென்றும் உபாசிக்கப்படுவர்

▲ ▲

பாடல் 161

# அப்பியாச கானம்

## சப்த அலங்கார கீதங்கள்

அலங்கார மேழுக்கும் முன்னே நன்கு
அமைந்திருக்கும் ஸ்வர தாள மேற்க
நலங்காணும் கீதங்கள் ஆக்கிச் சேர்த்தேன்
நயந்துகற்க அப்பியாச கானத்திற்காய்
இலங்குகின்ற தமிழிசையில் துளியரய்க் காணும்
இதனையும் இனிமைகண்டு ஏற்றுக் கொண்டு
பலங்கொள்ள வைத்திடுவர் எந்த நாளும்
பண்புயர்ந்த இசைவல்லோர் புவியில் தானே.

## விநாயகர்

இராகம் :- மாயாமாளவ கௌளை தாளம்;- சதுஸ்ர துருவம்

ஸரிகம / கரி / ஸ ரி க ரி / ஸ ரி க ம //
கரிமுக னடி யனுதினம் தொழுபவர்
ரிகமப / மக / ரிகமக / ரிகமப //
கருதிய துல கமிதினில் நிறைவுறும்
கமபத / பம / கமபம / கமபத //
பிரணவ வடி வுடையவ ரிவரருள்
மபதநி / தப / மபதப / மபதநி //
பெறுபவர் மிகு பெருமையை அடைகுவர்
பதநிஸ் / நித / பதநித / பதநிஸ் //
பெருவயி றினை யுடையவ ருலகினை
ஸ்நிதப தநி ஸ்நிதநி / ஸ்நிதப
அதனிடம் கொளு மிகுதிற முடையவர்
நிதபம பத நிதபத / நிதபம
ஒருமரு தனை யுடையவர் மறுமரு
தபமக மப தபமப / தபமக //
கரமது கொளக் கிரிதனி லெழுதினர்
பமகரி கம பமகம / பமகரி //
அரனது முதல் மகனென அறைகுவர்
மகரிஸ ரிக மகரிக / மகரிஸ //
கணபதி தனைத் துதிசெய இடரிலை



## உமாதேவி

தாளம்:- சதுஸ்ரமட்டியம்

ஸரிகரி / ஸ ரி / ஸ ரி க ம //
உமையவள் த னை த் தொழுதிட
ரிகமக / ரி க / ரி க ம ப //
உளமதில் வ லி பெருகிடும்
கமபம / க ம / கமபத //
அரனது இ ட ப் புறமது
மபதப / ம ப / ம ப த நி //
அழகுற நிறை பெருமையள்
பதநித / பத / பதநிஸ் //
கருணையின் வடி வவளுரு
ஸ்நிதநி / ஸ் நி / ஸ்நிதப //
கருதிய வ ர மருள்பவள்
நிதபத / நித / நிதபம //
அரனது செய லவள்செயல்
தபமப / தப / தப மக //
அரியினுக் கிவ ளிளை யவள்
பமகம / பம / பம கரி //
மலையர சனின் மக ளிவள்
மகரிக / மக / மக ரிஸ //
மரகத நிற முடையவள்

## முருகன்

தாளம்:- சதுஸ்ரரூபகம்

ஸரி / ஸ ரி க ம //
அழ கொளிமிகு
ரிக / ரி க ம ப //
முரு கனைத்துதி
கம / க ம ப த //
அயில் த னை க் க ர
மப / ம ப த நி //
மதி / லுடையவன்
பத / பதநிஸ் //
மயில் தனில்வரு

| | | |
|---|---|---|
| ஸ்நி | / | ஸ்நிதப // |
| மியநி | | புடையவன் |
| நித | / | நி த ப ம // |
| மலை | | ம க ள ர ன் |
| தப | / | த ப ம க // |
| மகிழ் | / | சுதனிவன் |
| பம | / | ப ம க ரி // |
| தொழு | | மடியவர் |
| மக | / | மகரிஸ // |
| துயர் | | களைபவன் |

## திருமால்

தாளம் :- மிஸ்ரஜெம்பை

| | | | | |
|---|---|---|---|---|
| ஸரிகஸரிஸரி | / | க | / | மா // |
| பெருமைமிகுதிரு | | வு | | மே |
| ரிக மரிகரிக | / | ம | / | பா // |
| எழிலொடருகுறை | | ய | | வே |
| க ம ப க ம க ம | / | ப | / | தா |
| அரவிலறிதுயி | | லை | | யே |
| ம ப த ம ப ம ப | / | த | / | நீ // |
| கொளுமரியினடி | | யை | | யே |
| பத நி பத பத | / | நி | / | ஸ்ா |
| பணியஇடரக | | லு | | மே |
| ஸ்நிதஸ்நிஸ்நி | / | த | / | பா // |
| பெருகு மக மகிழ் | | வு | | மே // |
| நிதப நித நித | / | ப | / | மா // |
| கருமு கிலை யனை | | ய | | ரே |
| த பம தப தப | / | ம | / | கா // |
| கருடன்மிசைவரு | | வ | | ரே |
| ப மக பம பம | / | க | / | ரீ // |
| உயிர்கள்நல மடை | | ய | | வே |
| ம க ரி மக மக | / | ரி | / | ஸா // |
| உரிய செயல்புரி | | வ | | ரே |



## கலைமகள்

தாளம்:- திஸ்ரதிருபுடை

| | | | | |
|---|---|---|---|---|
| ஸ ரி க | / | ஸ ரி | / | க ம // |
| ச க ல | | கலை | | க ளு ம் |
| ரி க ம | / | ரி க | / | மப // |
| அருளும் | | கலை | | மகள் |
| க ம ப | / | க ம | / | பத // |
| ப டி க | | நி ற | | மொடு |
| ம ப த | / | ம ப | / | தநி // |
| தி க ழு | | மு ரு | | வினள் |
| ப த நி | / | ப த | / | நி ஸ் // |
| வ ன ச | | ம ல | | ரி னி ல் |
| ஸ் நி த | / | ஸ் நி | / | த ப // |
| உ றை யு | | மியல் | | பி ன ள் |
| நி த ப | / | நி த | / | ப ம |
| இனிய | | மொழி | | யின ன் |
| த ப ம | / | த ப | / | ம க // |
| இசையில் | | மகிழ் | | ப வ ள் |
| ப ம க | / | ப ம | / | க ரி // |
| அ டி யை | | நினை | | பவர் |
| ம க ரி | / | ம க | / | ரி ஸ // |
| இ த ய | | முறை | | பவள் |

## சிவன்

தாளம் :- கண்ட அடம்

| | | | |
|---|---|---|---|
| ஸ ரீ கா | ஸாரிகா | மா | மா // |
| சி வா யா | சோதியே | சோ | மா |
| ரி கா மா | ரீ க மா | பா | பா // |
| நிலாசேர் | வேணியா | ரூ | யா |
| க மா பா | கா ம பா | தா | தா // |
| ப ரா வா | பா த மே | தா | தா |
| ம பா தா | மா ப தா | நீ | நீ // |
| ச பே சா | ஆ டு பா | தா | நீ |
| ப தா நீ | பா த நீ | ஸ்ா | ஸ்ா // |
| த யா ளா | வே த னே | ஈ | சா |
| ஸ் நீ தா | ஸ்ா நி தா | பா | பா // |
| அ ரா வா | ஆ தியே | தீ | பா |

| | | | |
|---|---|---|---|
| நி தா பா | நீ த பா | மா | மா // |
| வி னோ தா | கூறுசேர் | நா | மா // |
| த பா மா | தா ப மா | கா | கா |
| ம கா தே | வா தி தே | வா | கா // |
| ப மா கா | பா ம கா | ரீ | ரீ // |
| உ மா மா | தோ டு நீர் | வா | ரீர் |
| ம கா ரீ | மா க ரீ | ஸா | ஸா // |
| ம கே சா | கீ த னே | ரா | சா |

## திருமகள்

தாளம் :- சதுஸ்ர ஏகம்

| | | | |
|---|---|---|---|
| ஸ | ரி | க | ம // |
| தி | ரு | ம | கள் |
| நி | க | ம | ப // |
| க | ரு | ணை | யில் |
| க | ம | ப | த // |
| உ | ல | கு | யிர் |
| ம | ப | த | நி |
| ச | க | ல | மும் |
| ப | த | நி | ஸ் |
| ந | ல | மு | றும் |
| ஸ் | நி | த | ப // |
| அ | வ | ள | டி |
| நீ | த | ப | ம // |
| தொ | ழு | தி | டில் |
| த | ப | ம | க // |
| ப | ல | வி | த |
| ப | ம | க | ரி // |
| நி | தி | க | ளும் |
| ம | க | ரி | ஸ // |
| அ | ரு | ளு | வள் |

பாடல் 162

## சமயகுரவர் அருணகிரிநாதர்

கி. பி. 7ம் நூற்றாண்டு திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர்
கி. பி. 8ம் நூற்றாண்டு சுந்தரர்
கி. பி. 9-ம் அல்லது 10-ம் நூற்றாண்டு மாணிக்கவாசகர்
கி. பி- 15-ம் நூற்றாண்டு அருணகிரிநாதர்



தமிழிசையின் கருவூல மான பண்ணிசையைத்
தந்தஞான சம்பந்த ரப்பரொடு சுந்தரர்
அமிர்தனா திருவாச கமதனை ஈந்து
அகமதனை உருக்கு திருவாத வூரர்
உமையரனின் சுதனான முருகன் பேரில்
உயர்சந்தப் பாதந்த அருணகிரி நாதர்
எமதுஉள மிறையை நண்ண உதவினார்கள்
என்றுமிவர் அடிமலரைப் போற்று வோமே

### கர்நாடக இசைவளர்த்த பெரியார்களான மும்மூர்த்திகள்

### தியாகப் பிரமம் 1767 — 1847

திருமருவி நிற்கின்ற திருவா ரூரில்
திகழ்ராமப் பிரமத்தின் மைந்த னாக
அருள்பெருக அகிலமது புதுமை காண
அவதரித்த தூயோனாம் தியாக ராசர்
பெருமைமிகு ராமபிரா னைதுதித் தே
பக்தியொடு கீர்த்தனைகள் தெலுங்கி லீந்தார்
பிரியமொடு திராட்சை என்றே இவற்றைச் சொன்னார்
பூதலத்தில் இவர்நாம் என்றும் வாழ்க !

### முத்துஸ்வாமி தீட்சகர் 1769 — 1835

முருகனிலே அன்புகொண்ட முத்துஸவாமி
தீட்சதரின் இசைப்பாடல் வட மொழியில்
பெருகிவரு நயங்கண்டு தேங்கா யென்றார்
போற்றிசெய்து நாம்பாடி நன்மை எய்தக்
கருணைமிகு மிசைப்பாடல் பலவற் றோடு
நவகோள்கள் அருள்பெறவும் பாடல் தந்தார்
பெருநெறியில் நின்றுஇவர் ஈந்த பாடல்
பாரிலிசைக் கலையை நன்கு வளர்த்திடுமே

### சியாமா சாஸ்திரிகள் 1762 — 1827

காமாட்சி யம்மையிலே அன்பு பூண்டு
கானமதைப் பரப்பு சியாமா சாஸ்திரிகள்
தாமாட்கி செய்தபல ராகங் கொண்டு
தான விசேடம் விளங்கு கீர்த்தனைகள்

பூமாது உள்ளளவும் பெருமை காணப்
புதுமைமிகு தமிழோடு வட மொழியில்
நாமாட்சி செய்துபாட நயந் தளித்தார்
நல்வாழைக் கனியென்றே இதனைச் சொன்னார்

## பிதாமகர்
## புரந்தர தாசர் 1484 – 1564

நிரந்தரமாய் நமது இசை வளர்ச்சி காண
நன்மைதரு மாரம்ப வரிசை ஜெண்டை
விரிந்தசப்த அலங்காரம் கீதம் மற்றும்
கன்னடத்தில் பலபதங்கள் ஆக்கி மேலாம்
அரும்பணிசெய் ஆதிகுரு பிதா மகரென்
றதிமெலாம் புகழ்பரவ இலங்கி நிற்கும்
புரந்த தாசர்பாதம் போற்றி செய்து
புனிதமிகு மிசைக்கலையை நாளும் காப்போம்

## முத்துத்தாண்டவர்
## 17ம் நூற்றாண்டு

அன்னை உமை ஈந்ததிரு அமுதுண்டு அவர்சொல்ல
அருள்மிகுந் திலங்குதில்லைப் பதிக்குச் சென்று
அன்புடனே சிவகங்கைத் தீர்த்தமதி லேதோய்ந்து
அம்மைஅரன் அடிவணங்கத் தொழுநோய் தீர்ந்து
முன்அங்கு கேட்கின்ற சொல்லைமுத லாய்க்கொண்டு
முத்தான பாடல்செந் தமிழ்மொழியில் எமக்கீந்த
தன்னிகரில் லாமேலோன் தரணியோர் போற்றுமுத்துத்
தாண்டவர் பாதமதை என்றுமே பணிகுவோமே.

| | |
|---|---|
| கோபாலகிருஷ்ண பாரதியார் | 1810 – 1896 |
| அருணாசலக்கவிராயர் | 1711 – 1788 |
| பாபநாசம் சிவன் | 1890 – 1973 |

அரன்பேரி லினியதமிழ்க் கீர்த்தனைகள் சிவகதையோ
டறமும்செய் கோபால கிருஷ்ண பாரதியார்
தரணிபுகழ் ராமநாடகக் கீர்த்தனை தனை ஈந்து
தமிழிசையை வளர்த்த அருணாசலக் கவிராயர்
திறமைதிகழ் கீர்த்தனைகள் தமிழில்வட மொழியிற்செய்
தூயபக்தி தனைஉடைய பாபநாசம் சிவனோடு
உரனடையத் தமிழிசைக்குப் பாடல்கள் ஆக்கியீந்த
உத்தமர்கள் அனைவரையும் போற்றல் செய்வோம்



பாடல்: 163

## சிதம்பரம்

இராகம்: யமுனாகல்யாணி
தாளம்: ஆதி

ஆ: ஸரிகபமதஸ்
அ: ஸ்தபமபகரிஸ

### பல்லவி

;சிதம்பரமே நல்ல / ;சுகந்தருமே தில்லைச் //
;சிதம்பரமே நல்ல / சுகந்தருமே //

### அனுபல்லவி

;பதஞ்சலி புலி போற்றப் / பாதந்தனைத் தூக்கி //
;இதம் பெற நடராசன் / ;ஆடியதலமான // (சிதம்பரமே)

### சரணம்

1. நாரதர் தும்புரு / ;கந்தருவர் பாட
;நந்தி மத்தளந் / ;தன்னை நயந்துமே இசைத்திட //
;சீரமை வீணைதனை / ;வாணியும் மீட்டிட //
;சிங்காரமாய் ஆடிச் / ;சீவர்களை ஆட்டும் (சிதம்பரமே)

2. ;ஆதிமூல லிங்கம் / ;அருள்மிகுநல லிங்கம் //
;ஆனந்த மாய்முனிவர் / போற்றிய லிங்கம்//
;சோதியாகத் தோன்றி / மாணிக்க வாசகரை//
/சேர்த் திட்டலிங்கம் செப்புதற் கரும்லிங்கம்
(சிதம்பரம்)

3. ;பவந்தனைத் தொலைத்திடும் / ;சிவகங்கைத் தீர்த்தமும் //
;பாங்காக விளங்கு மா / யிரங்கால மண்டபமும் //
;தவந்தனைச் செய்தவர் / ;தரிசிக்க முத்தி தரும்//
;தன்னிகரில்லாத / ;தலமாக விளங்கிடும்// (சிதம்பரமே)

4. ;கருணை வடிவானாள் / ;சிவகாம சுந்தரி//
;கரங்கூப்புவார் வினையை / :உடன் நீக்கிக் காத்திடுவாள்//
;பரன்பாகத்திடம் கொண்டாள் /;பக்தரின் உளம் கொண்டாள்//
;பரனிடம் சேர்த்திடுவாள் / பதமலர் சூட்டிடுவாள் //
(சிதம்பரமே)

5. ;முக்குறுணிப் பிள்ளை / முன்னின்று காத்திடும் //
;மூசிக வாகனத்தில் / ;ஏறி வந்தருள் தரும் //
;பக்குவமுடையார்க்கும் / ;பரஞானம் கொடுத்திடும் //
;பந்தமெல்லாம் அகலப் / ;புந்தியைத் திருத்திடும் //
(சிதம்பரமே)

6. ;கோவர்த்தன கிரியைக் / ;குடையாய்ப் பிடித்த அந்தக் //
கோவிந்தன் அழகாக / அறிதுயில் கொள்ளுமிடம்
;பாவந்தனைத் தொலைத்தே / ;பக்தர்கள் உய்திட //
;பாங்காய்ச் ஸ்ரீதேவியுடன் / ;நீங்காச் சித்ரகூடமாம் //
(சிதம்பரமே)

பாடல் 164

## நாராயணன்

இராகம்: மோகனம்
தாளம்: ஆதி

ஆ- ஸரிகபதஸ்
அ- ஸ்தபகரிஸ்
(28வது மே.க. ஜன்னியம்)

1. நாராயணா நமோ / நாராயணா //
நாடிச் சரணடைந்தேன் / நாராயணா //
சீரோங்கு கார்வண்ணா / நாராயணா //
சித்தமிரங்கியருள் / நாராயணா //

2. பூமகளின் நாயகனே / நாராயணா //
பாற்கடலில் பள்ளிகொண்டாய் / நாராயணா //
வாமனராய் வந்தவனே / நாராயணா //
வையமொடு விண்ணளந்தாய் / நாராயணா //

3. கண்ணனாக அவதரித்தாய் / நாராயணா //
காலமெல்லாங் காப்பவனே / நாராயணா //
வெண்ணெய் திருடி உண்டவனே / நாராயணா //
வேணுகானம் ஈந்தவனே / நாராயணா //

4. கோபியரை மகிழ வைத்தாய் / நாராயணா //
கோவர்த்தன கிரிபிடித்தாய் / நாராயணா //
தீபமேற்றி உனை அழைத்தேன் / நாராயணா //
தினமும் உள்ளந் தனிலுறைவாய் / நாராயணா //

5. பூதகியின் உயிர் குடித்தாய் / நாராயணா //
புதுமைபல காட்டிநின்றாய் / நாராயணா //
மாதவரைக் காப்பவனே / நாராயணா //
மாயவனே வந்திடுவாய் / நாராயணா //

6. கம்சனை வதைத்தவனே / நாராயணா //
காளிங்கனில் நடம்புரிந்தாய் / நாராயணா //
அம்பிகையின் சோதரனே / நாராயணா //
அருள்புரிவாய் இது தருணம் / நாராயணா //

7. நரசிங்க வடிவுகொண்டாய் / நாராயணா //
நாடித்தூணிலே உதித்தாய் / நாராயணா //
இரணியனைச் சங்கரித்தாய் / நாராயணா //
இன்னலெல்லாம் நீக்கிவைப்பாய் / நாராயணா //

8. மோகினியாய் வந்துநின்றாய் / நாராயணா //
முனிவர்களை மயங்க வைத்தாய் / நாராயணா //
பாகமாக்கி அமிர்தமீந்தாய் / நாராயணா //
பக்தர்களின் நல்லமிர்தே / நாராயணா //



9. பெருவராக மாகிநின்றாய் நாராயணா //
பூமிதேவியைச் சுமந்தாய் / நாராயணா //
அரனின் சக்தியாகி நின்றாய் நாராயணா /
ஐயப்பனை ஈந்தவனே / நாராயணா //

10. இராமராக வந்தவனே / நாராயணா //
இராவணனைச் சங்கரித்தாய் / நாராயணா //
ஆமைமச்சமாகி வந்தாய் / நாராயணா //
அகிலமெல்லாமே நிறைந்தாய் / நாராயணா //

11. பாண்டவரைக் காத்தவனே / நாராயணா //
பார்த்தனின் நற்சாரதியே / நாராயணா //
வேண்டுவரந் தந்திடுவாய் / நாராயணா //
விரைந்து காட்சி தந்திடுவாய் / நாராயணா //

12. சங்கு சக்கரத்துடனே / நாராயணா //
சந்ததமும் காத்திடய்யா / நாராயணா //
பங்கசவல்லியோடு / நாராயணா //
பரிந்து வந்து அருள்புரி ஓம் / நாராயணா //

நாராயணா / நாராயணா / நாராயணா ஓம் / நாராயணா //

▲ ▲

பாடல் 165

இராகம்: தர்பாரிகானடா
தாளம்- ஆதி

ஆ- ஸரிகாமபதாநிஸ்
அ- ஸ்நிபமகாமரிஸ
(22வது மே. க. ஜன்னியம்)

## ஐயப்பன்

1. ;சபரிமலை மீதமர்ந்த ஐயப்பா - என்னைச் //
;சந்ததமும் காத்தருளே / செய்யப்பா //
;அபயமென்று வருவோரை / ஐயப்பா - நல் //
;அருள் விழியால் நோக்கி நிற்கும் / ஐயப்பா //

2. ;அரி அரனின் திருக்குமரா / ஐயப்பா - நின் //
;அன்பர்களின் உளமமரும் / மெய்யப்பா //
;வரும் இடரை நீக்கிடுவாய் ஐயப்பா - நீ //
;வரம்பலவும் தந்தருள்வாய் / ;மெய்யப்பா //

3. ;கருணை மிகக் கொண்டவரே / ஐயப்பா - நீன் //
;கழலடியே போற்றி செய்தேன் / மெய்யப்பா //
;மருமலரைத்தூவி நின்றேன் / ஐயப்பா - நீ //
;மகிழ்ந்து வந்து ஏற்றருள்வாய் / மெய்யப்பா //

20

4. ;புலியின்மீது அமர்ந்து வரும் | ஐயப்பா - நான் ||
;புந்திகனிந்துனைத் தொழுதேன் | மெய்யப்பா ||
;கலியுகத்தில் நின்னருளே ஐயப்பா - இந்தக் ||
;காசினியைக் காத்துநிற்கும் | மெய்யப்பா ||

5. ;செய்யும் தொழில் எவையினுமே | ஐயப்பா ||
;சேர்ந்து நின்று ஜெயமளிப்பாய் | மெய்யப்பா ||
;உய்யும்வகை காட்டிநிற்கும் | ஐயப்பா நீ ||
;உள்ளொளியாய் நின்றருள்வாய் மெய்யப்பா ||

6. ;தேவாதி தேவர் தொழும் ஐயப்பா - நீ ||
தரிசனமே தந்தருள்வாய் - மெய்யப்பா ||
;மூவாசை பற்றிடினும் | ஐயப்பா - நீ ||
;முனியாது பொறுத்தருள்வாய் | மெய்யப்பா ||

7. ;இந்திராணி தனைக்காத்தாய் | ஐயப்பா - நீ ||
;இடரனைத்தும் நீக்கிவைப்பாய் | மெய்யப்பா ||
;பந்தபாசத்து முன்றாலும் | ஐயப்பா - நின் ||
;பாதமதை நான் மறவேன் | மெய்யப்பா ||

8. வீரமாகாளர் அங்கே | ஐயப்பா - என்றும் ||
விரும்பி நினக்கே வல்செய்வார் | மெய்யப்பா ||
;சேருகின்ற தெய்வகணம் | ஐயப்பா - நின் ||
சேவடியைப் போற்றி செய்யும் | மெய்யப்பா ||

9. ;மெய்யடியார் உனைநினைத்து | ஐயப்பா - தம் ||
;மெய்சிலிர்த்து உருகிநிற்பார் மெய்யப்பா ||
;கைதனையே சிரம்வைத்து ஐயப்பா - நின் ||
;கழலடியே போற்றி செய்தேன் மெய்யப்பா ||

ஐயப்பா . . . | மெய்யப்பா || ஐயப்பா . . . | மெய்யப்பா ||

பாடல் 166

இராகம்: ஆனந்தபைரவி — ஆ- ஸகரிகமபதஸ்
தாளம்: ஆதி — அ- ஸ்நிதபமகரிஸ
(20வது மேளகர்த்தா

பஜனைப்பாடல்

## முத்துமாரி

1. சரணம் சரணம் அம்மா | முத்துமாரி எங்கள் ||
சங்கரனார் சக்தியம்மா | முத்துமாரி ||
திருசூலம் கைதாங்கி | முத்துமாரி அம்மா ||
தீவினையை நீக்கிவைப்பாய் | முத்துமாரி ||



2. கும்பத்தினில் அமரும் | முத்து மாரி | அம்மா ||
;கொடியவினை நீக்கிவைப்பாய் | முத்துமாரி ||
நம்பும் அடியவரை | முத்துமாரி அம்மா ||
நாளும் காக்கவல்ல சக்தி | முத்துமாரி ||

3. கன்னபுரத்தவளே | முத்துமாரி அம்மா ||
காரணியே காருமம்மா | முத்துமாரி ||
வண்ணச் செம்பட்டுடனே | முத்துமாரி அம்மா ||
வீதியுலா வந்திடுவாய் | முத்துமாரி ||

4. சிங்கத்திலே அமர்ந்து | முத்து மாரி அம்மா ||
சீக்கிரமாய் வந்து காப்பாய் | முத்துமாரி ||
அங்கத்தில் அரவணிந்தாய் | முத்து மாரி அம்மா ||
அகிலமெல்லாம் மாள்பவளே | முத்துமாரி ||

5. பரந்தாமன் சோதரியே | முத்துமாரி அம்மா ||
பார்வதியே காருமம்மா | முத்துமாரி ||
வரந்தரவே வந்திடுவாய் | முத்துமாரி ||
வளஞ்சிறக்க வைத்திடுவாய் | முத்துமாரி ||

6. காத்தவராயனையே | முத்துமாரி அம்மா ||
காக்கவரம் ஈந்தவளே | முத்துமாரி ||
பூத்தமீர் தன்னைச் சொரிந்து | முத்துமாரி அம்மா ||
பொன்னடியைப் போற்றி செய்தோம் | முத்துமாரி ||

7. கரும்பிளநீர் பால்பாணக்கம் | முத்துமாரி அம்மா ||
கொண்டுனக்கும் பூசை செய்வோம் | முததுமாரி ||
விரும்புபழவர்க்க மெல்லாம் | முத்துமாரி அம்மா ||
விதம்விதமாய்ப் படைத்திடுவோம் | முத்துமாரி ||

8. தேவாதி தேவரெல்லாம் | முத்துமாரி அம்மா ||
தேடி உனக்கேவல் செய்வார் | முத்துமாரி ||
நாவால் உன்புகழ்பாடி | முத்துமாரி அம்மா ||
நன்மை யெல்லாம் பெற்றிடுவார் | முத்துமாரி ||

9. அம்மை பேதி நோய்கள் எல்லாம் | முத்துமாரி அம்மா ||
அடிபணிந்தால் அஞ்சி ஓடும் | முத்துமாரி ||
இம்மை மறுமை இன்பம் | முத்துமாரி அம்மா ||
இரக்கமுடன் நீயளிப்பாய் | முத்துமாரி ||

10. சமயபுரத்தவளே | முத்துமாரி அம்மா ||
சஞ்சலங்கள் தீர்ப்பவளே | முத்துமாரி ||
உமையவளே ஓங்காரி முத்துமாரி
உத்தமியே காருமம்மா முத்துமாரி

முத்துமாரி அம்மா | முத்துமாரி ||
முத்துமாரி அம்மா | முத்துமாரி ||

பாடல் 167

## பஜனைப்பாடல்

இராகம்; ஆனந்தபைரவி
தாளம்; ஆதி

1. ;அகிலமெல்லாம் நிறைந்தாய் | தாயே காளி ||
;அன்பர்களைக் காப்பவளே | தாயே காளி ||
மகிமையெல்லாம் கொண்டாய் | தாயே காளி ||
;மகிழ்ந்து வரந்தருவாய் | தாயே காளி ||

2. திரிசூலம் கையிற் கொண்டு | தாயே காளி ||
;திக்கனைத்தும் காத்திடுவாய் | தாயே காளி ||
அரியின் நற்சோதரியே தாயே | காளி ||
;ஆங்கார ரூபி நீயே | தாயே காளி ||

3. சிவந்தபட்டாடையுடன் | தாயே காளி ||
சிங்கத்திலே அமர்ந்தாய் | தாயே காளி ||
தவந்தனைச் செய்தவர்க்குத் | தாயே காளி ||
;தரியாது தோற்றிடுவாய் | தாயே காளி ||

4. கனகசபேசனுடன் | தாயே காளி ||
;கடும் நடனமாடிநின்றாய் | தாயே காளி ||
வனமெல்லாம் சுற்றிடுவாய் | தாயே காளி ||
;வந்து அருள் தந்திடுவாய் | தாயே காளி ||

5. விரித்த சடையுடனே | தாயே காளி ||
;வீரமொடுவந்திடுவாய் தாயே காளி ||
சிறுத்த இடையசையத் | தாயே காளி ||
;சிங்காரமாய் வருவாய் தாயே காளி ||

6. ஓங்காரி ஆங்காரி | தாயே காளி ||
;உமையம்மை சோதரியே | தாயே காளி ||
ஆங்கார ரூபமொடு | தாயே காளி ||
;அசுரர்களைச் சங்கரித்தாய் | தாயே காளி ||

7. முக்கோண சக்கரத்தில் | தாயே காளி ||
;மனம்மகிழ்ந்து வீற்றிருப்பாய் | தாயே காளி ||
எக்கோணம் சென்றாலும் | தாயே காளி
;எம்மை என்றும் காத்திடம்மா | தாயே காளி ||

தாயே காளி || தாயே காளி ||



பாடல் 168

## மட்டுநகர் அருள்மிகு சித்தாண்டி முருகன் பேரில்

இராகம்: ஜமுனாகல்யாணி
தாளம்- ஆதி

ஆ- ஸரிகபமபதஸா
அ- ஸ்தபமபகரிஸா
(65வது மே. க. ஜன்னியம்)

பல்லவி

சித்தாண்டிதனிலே | ;சித்தம்ம | கிழ்ந்துறையும் ||
;சித்ரவேலாயுதனே | வா ; ; பரி | வுடனே உளமுறை ||

அனுபல்லவி

பித்தாண்டியின் பாலனே | ;அருள்தரு வாய்) சீலனே ||
;புள்ளிமயில் மீதி | லே ; ; வரு | சரவணபவகுக ||
(சித்தாண்டி)

சரணம்

1. ஐங்கரனின் சோதர | ;அரிமரு | காகுமரா ||
;சங்கரர்க்கும் உப | ;தேசம்செய் | தாய் சண்முகா ||
;மங்கைவள்ளிதெய்வ | ;யானை மணவாளா ||
;மங்களவாழ்வுபெற | வே : ; என் வினைவில கிட அருள் ||

2. ;சிகண்டிமுனிவரது | ;தவத்தில் மகிழ்ந்தவனே ||
;சிந்தைக்கினியனே | ;விந்தை புரிபவனே ||
;அகந்தைகொள் பிரமனை | ;பிரணவப் பொருள் கேட்டாய் ||
;அரனுக்கும் குருவாகி | யே ; ; அதன் பொருளை உரைத்தாய் ||
(சித்தாண்டி)

---

சித்தாண்டி: சிகண்டிமுனிவரால் வழிபட்டதலம் எனக் கூறுவர்.

பாடல்: 169

## கொக்குவில் அருள்மிகு மஞ்சவனப்பதி முருகன் பேரில்

இராகம்; கல்யாணி
தாளம்; ஆதி

ஆ; ஸரிகமபதநிஸ
அ. ஸ்நிதபமகரிஸ
(65வது மேளகர்த்தா)

பல்லவி

;மஞ்சவனப்பதி முருகா | ;மால்மருகா குகா ||
;மனமுருகித் தொழுவார் | ;வினையகற்றும் அழகா ||

அனுபல்லவி

;தஞ்சமென்றுனை அடைந்தே | ;தாழ்பணிந்தேன் ஐயா ||
;தந்திடுவாய் அருளே | ;தந்திமுகன் சோதரா || (மஞ்சவன)

சரணம்

;விந்தையாய்ச் சரவணையில் / ;அரவிந்த மலர் மீது //
;விளையாடிவருகுமரா / ; அரனுமை தருபாலகா //
சுந்தர மயில் மீது / வள்ளி தெய்வயானை //

இரண்டாம் காலம்

சிந்தைமகிழ்ந்திரு பாலு மமர்ந்திட /
வந்திடுவாய் வடி வேலனே சண்முக //

(மஞ்வன)

பாடல் 170

## கதிர்காம முருகன் பேரில்

### அந்தாதி வெண்பா

### மாணிக்கப் பிள்ளையார்

சீர்பரவு மாணிக்க கங்கை யருகமர்ந்த
கார்பரவு வேழமுகன் பாதம் – ஆர்வமுடன்
கும்பிடவே விக்கினங்கள் நீக்கியென்றும் காப்பான்
நம்பிடுவாய் நெஞ்சே நயந்து

### கதிர்காம முருகன்

1. மாணிக்க கங்கை மகிழ்ந்தோடும் நல்லிடத்தே
காணிக்கை யாயன்பை ஈபவர்கள் - காணும்
கதிர்காமக் கந்தனது பாதத்தை யென்றும்
துதிபாடி வாழ்வோம் சிறந்து

2. சிறந்து விளங்குகதிர் காமத்திற் குச்சென்று
பிறந்த பயன்பெருகப் போற்றில் - நெறியின்றி
முன்செய்த தீவினைகள் நீக்கி இன்பமே
என்றும் பெருகவைப்பன் பார்

3. பார்தனிலே மேன்மைசேர் மைந்தமிழ்ப் பாடலுக்குச்
சீர்தனைத் தந்திடும் வள்ளலவன் - ஆர்வமொடு
மெய்யன்பர் கேட்கும் வரந்தன்னைத் தந்திடுவான்
உய்திடுவாய் நெஞ்சே நயந்து

4. நயந்து பலகாலம் நாளும் துதித்த
உயர்ந்த தவர்முத்து லிங்கர் - சுயமாய்
வரைந்த முருகனது யந்திரத் தாலே
சிறந்த அருளீ தலம்



5. தலமிதனிற் காணுகின்ற வெற்பேறி யன்பாய்
நலமருளும் வள்ளி முருகன் - மலையில்
பழவகைகள் தேன்தினை மாவிளக்கு வைத்தேவி
தொழுது புகழ்தனையே பாடு

6. பாடும் அருணகிரி நாதர் திருப்புகழைச்
சூடும் குமரன் வழிநின்று - நாடிவரும்
அன்பரிடம் தேன்தினைமா பெற்றும் சுவைப்பான்
இன்பமதைத் தந்திடுவான் காண்

7. காண்பவர்கள் ஆனந்தங் கொண்டு பரவசமாய்
மாண்புமிகு கந்தன் மலரடியை - வேண்டி
விரும்பியவை எல்லாம் பெற்றிடுவார் என்றும்
விரைந்தருளும் தெய்வ மவன்

8. அவனை அடைந்தார்க்கு யாவுமெளி தாகும்
சிவனின் மகனைச் சிந்தித்து - அவனிதனில்
உய்வதற்கு ஏற்ற நற்செயலை என்றுந்தான்
செய்வதற்கே இந்தப் பிறப்பு

9. பிறப்பு இறப்பற்ற முத்தினை ஈவான்
சிறப்பு மிகுகுன்றில் நிற்பான் - மறப்பில்லா
அவ்வைக்கு நாவற் கனியோடு காட்சிதந்தான்
செவ்வேலை ஏந்து கரன்

10. கரங்களீ ராறுடனே ஆறுமுகம் கொண்டான்
வரங்களீ யென்றுமே வேண்டில் - பெருங்கருணை
கொண்டு மயில்மீதில் வந்து குறைதீர்ப்பன்
பண்டுகூ ரைக்கொல் குகன்

11. குகனுறை கோயிலிதில் மூடுதிரை என்றும்
அகமுறையும் தன்மை காட்டும் - செகமிதிலே
பார்க்கப் புதுமைஇது வாய்கட்டிச் செய்பூசை
சேர்க்கும் சரவணனின் தாள்

12. தாள்வருந்தச் சென்று வள்ளிதனை ஆட்கொண்டான்
ஊழ்வருத்தம் தீர்த்து உளமுறைவான் - நாள்தோறும்
கந்தா கதிர்காம வேலவஎன் றேவணங்கிச்
சிந்திக்கச் சேரும் சிறப்பு

பாடல் 171

## ஆறு ஆதாரக் கீர்த்தனை

இராகம்: வசந்தபைரவி — ஆ ஸரிகமதநிஸா
தாளம்: ஆதி — அ ஸ்நிதபமகரிஸ
(26வது மே. க ஜன்னியம்)

பல்லவி

தாயே காமாட்சி ; |காஞ்சி உன் ஆட்சி ||
;தந்திடு உன் காட்சி | ;ஏகாமிரேசர்மகிழ் || (தாயே)

அனுபல்லவி

நீயே மூலாதாரப் | ;பிருதுவித் தலம் கொண்டாய் ||
;நாழிநெல்லை ஈந்து | ;நானிலம் வாழவைத்தாய் ||
(தாசிய)

சரணம்

1. ;சேவடி தனை நாடிச் | ;சேயேன் தினம் துதித்தேன் ||
;சிந்தை கனிந்திடுவாய் | ;வந்து வரந்தருவாய் ||
;நாவிலுன் புகழ்பாடி | ;நற்பணி செய்திடவே ||
பூவடி சூட்டுவாய் நின் |
பாதந்தனில் கண்ணீரைச் சொரிந்தேன் ||
நாதஓங்காரிவ சந்தபைரவியே || (தாயே)

2. ;திருஅண்ணா மலையே | ;ஸ்வாதிட்டானம் ஆகும்
;திருமால் அடி பிரமன் | ;முடிதேடியுங்காணா ||
;பெருஞ்சோதியின் சக்தியாய் | ;நின்ற பெருமையனே ||
;பரிந்தெனை மகிழவைப்பாய் | ;பரமனுடன் அருள்செய் ||
(தாயே)

3. ;திரு ஆனைக்காவே | ;மணிபூரகமே ||
;அப்புலிங்கர் மகிழும் | ;அகிலாண்டேஸ்வரியே ||
;பெரும் அருள் சுரந்திடும் | ;சம்புகேஸ்வரத்தில் ||
;பிரியமாய் அமர்ந்தாய் | ;விரைந்து அருள் புரிவாய் ||
(தாயே)

4. காளத்தித்தலமேதான் | ;அனாகதமே ||
;குடுமித் தேவருடன் | ;இணைந்த சக்தியே ||
;நாளும் பொன்முகலி | ;மலர்சேர்க்கும் வாயுத்தலம் ||
;நயந்து எனக்கருள்வீர் | கண்ணப்பன் பூசை ஏற்றீர் ||
(தாயே)

5. ;சிதம்பரத்தலமே | ;விசுத்தியாகும் ||
;சேவடிதூக்கிநிதம் | ;நடராசன் ஆடிட ||
;இதம்பெறவே ஐந்தொழில் | இணைந்த சிவகாமி நீ ||
;இக்கணம் அரனுடனே || வந்தருள் தருவாயே || (தாயே)



6. ;காசித்தலம் தான்; | ;ஆக் ஞாசக்கரமே ||
;காலனகல வந்து | ;காத்திடம்மா நிதமே ||
;ஈசன்விஷ்வநாதர் | ;இணைந்த விசாலாட்சி நீ ||
;என்றும் பாதம் தொழுதேன் | ;ஏழையேன் நின்னடிமை ||
(தாயே)

7. ;சகஸ்ரதளகமலம் | ;மாமதுரை . . . . ||
;சோமசுந்தரர் மகிழ் | மீனாட்சி நீயே ||
;செகத்தில் அனுதினமும் | ;அடிமலர் தொழுதேன் ||
;செய்எனக்கருள் புரிவீர் | ;அம்மை அப்பரே நிதம் ||
(தாயே)

▲ ▲

பாடல் 172

இராகம்: கதனகுதூகலம் — ஆ- ஸரிமதாநிகபமஸ்ர்
தாளம்: ஆதி — அ- ஸ்நிதபமகரிஸ
(29வது மே.க. ஜன்னியம்)

பல்லவி

கண்டேன் குதூகலம் | கொண்டே நின்றேன் ||
;குருந்தமரத்தடியில் | ;குருவாய் அமர்ந்தவனைக் ||

அனுபல்லவி

பண்டே அரிதேடிக் | காணாத் திருப்பாதன் ||
கொண்டீட கருணையினால் | வந்தே காட்சியளித்தான் ||
(கண்டேன்)

சரணம்

கல்லாலின் கீழமர்ந்து | நால்வர்க்குபதேசம் செய்தோன் ||
வில்லால் பிரம்பால் அடி | பட்டு விந்தை காட்டி நின்றோன் ||
நல்லார் உளத்தொளியாய் | என்றுமே திகழ்பவனை ||
நாடித்தவம் செய்தவர்க்கு | நல்வரம் தரும் அரனைக் ||
(கண்டேன்)

▲ ▲

பாடல் 173

## மந்துவில் அருள்மிகு கேலம் ராஜராசேஸ்வரி பேரில்

இராகம்: வலஜி — ஆ. ஸகபதநிஸ்
தாளம்: ஆதி — அ. ஸ்நிதபமகரிஸ
(28-வது மே.க. ஜன்னியம்)

பல்லவி

கேலம் தலத்திலுறை | ; ராஜராசேஸ்வரி ||
;சீலவாழ்வு தருவாய் | ;சுந்தரி மாலினி ||

அனுபல்லவி

;ஆலமுண்டவனில் | ;பங்குகொள் பகவதி ||
;அங்கயற்கண்ணி சித்தி | ;அனைத்தையும் ஈந்தருள் |;
(கேலம்)

சரணம்

1. ;சிந்தைதனிலுறையும் | ;ஜெகன் மோகினியே ||
;சங்கரிபார்வதி | ;சாப்பவிபரையே ||
;சந்ததமும் தொழுதேன் | ; வந்தெனை ஆதரி நீ ||
;சர்வசக்திநீயே | ;சண்முகனின் தாயே || (கோலம்)

2. ;எண்ணரிய வடிவாய் | ;எங்குமே நிறைந்தாய் ||
;நண்ணிடுவோர்க்கு அருள் | ;நாளுமே சுரந்தாய் ||
;பண்ணினிலே கலந்தாய் | ;பரிவினிலே சிறந்தாய் ||
;புதுமைகள் நிதம்புரிந்தாய் |
மருதநிலமருங்கில்|
மலர்ப்பொழில் பணைதிகழ் || (கேலம்)

▲ ▲

பாடல் 174

## திருமாலின் அட்டசயனத்தலங்கள் (நிந்தாஸ்துதி)

இராகம்: மோகனம் ஆ- ஸரிகபதஸ்
தாளம்: ஆதி அ- ஸ்தபகரிஸ
(28-வது மே. க. ஜன்னியம்)

பல்லவி

;பாற்கடல்தனிலே | ;பள்ளி கொள் திருமாலே ||
;பாடித்தினம் துதித்தேன் | ;திருச்செவி கேட்கலையோ||

அனுபல்லவி

வீற்றிருந்து முறையாய்க் | ;காப்பதன்றோ பொருத்தம் ||
;விந்தையாய் இருக்குதையா | ;திருமகளே நீயும் சொல் ||
(பாற்கடல்)

சரணம்

1. ;வடபத்திரசயனம் | ;வில்லிபுத்தூரினிலே ||
;வீரசயனம் திரு | ;இந்தளூர்தனிலே ||
;கடல்மல்லை தனிலே | ;தல சயனமே ||
;குடந்தையில் உத்தான | ;சயனந்தனையே கொண்டாய் ||
(பாற்கடல்)

2. ;திருப்புல்லாணியில் | ;தர்ப்பசயனமே ||
;திருவரங்கந்தனில் | ;புஜங்கசயனம் கொண்டாய் ||
;திருநீர்மலைதனில் | ;மாணிக்க சயனம் ||
தில்லைச்சித்ர கூடந்தனில் | ;போகசயனம் கொண்டாய்
(பாற்கடல்)



3. ;சயனங்கொண்டது இனிப் | ;போதுமையா ||
;சஞ்சலந்தீர்த்திட | ;எண்ணுமையா ||
;நயனங்களைத்திறந்து | ;பாருமையா ||
;நம்பிநின்னைத் தொழுதேன் |
நல்லருள் தந்திடு நாராயணனே || (பாற்கடல்)

▲ ▲

பாடல் 175

## அபிஷேகமகிமை

ராகம்: கல்யாணவசந்தம் ஆ- ஸகமதநிஸ்
தாளம்: ஆதி அ- ஸ்நிதபமகரிஸ
(21வது மேளகர்த்தாவின் ஜன்னியம்)

பல்லவி

;எங்கும் நிறைந்த அரன் | ;உமையவள் பூவுலகில் ||
;தங்கிஅருள் செய்யும் இடம் | ;ஆலயமே ||

அனுபல்லவி

;திங்கள்கங்கை அரவோடு | ;கொன்றை மத்தம் சூடுமரன் ||
;தூய அபிஷேகம் ஏற்று | நல்அருள் ஈந்திடுவான் || (எங்கும்)

சரணம்

1. நறுமணம்சேர்சந்தனம் | ;இறையுடன் இணையவைக்கும் ||
;நற்கரும்பின் ரசமோ | ;சுகவாழ்வைக் கொடுக்கும் ||
;மருமலர்த்தேன் என்றும் | கலைமகள் அருள்சேர்க்கும் ||
;மகிமையறிந்து செய்து | ;உமைபரன் அருள்பெறுவோம் ||
(எங்கும்)

2. ;இனியபழச்சாறு | எமபயத்தை நீக்கும் ||
;கலச அபிஷேகம்: | வறுமைதனைநீக்கும் ||
;தனமெனும் ஆவின்பால் | ;தரணியில் நீள் ஆயுள் ||
தன்னிகரில்லா இதன் நெய் | ;மோட்சமதைக் கொடுக்கும் ||
(எங்கும்)

3. ;பஞ்சகவ்வியத்தால் | ;மனம் உயர்வடைந்திடும் ||
;புனிதமிகுதயிரோ | ;புத்திரப்பேறீயும் ||
;சிந்தைமகிழ் இளநீர் | ;பதவிதனை ஈயும் ||
;×எள்நெய்யினால் நல்ல | ;சுகவாழ்வு கிடைக்கும் || (எங்கும்)

4. ;இனிய பஞ்சாமிர்தம் | ;வெற்றிகளைக் கொடுக்கும் ||
;என்றும் மகிழ்வோடு | ;ஈசற்கபிஷேகம் செய்வோம் ||
;புனிதப்பிறவி இதில் | ;பெரும்பயன் அடைவோம் ||
;புண்ணியச்செயல்புரிவோம் |
எண்ணிய யாவுமே என்றுமே பெறுவோம்
திண்ணமிதுவாகும் வாழ்வுவசந்தம் (எங்கும்)

எள்நெய் - நல்லெண்ணெய்

பாடல் 176

இராகம்: சுத்ததன்யாசி ஆ- ஸகமபநிஸ
தாளம்: ஆதி அ- ஸநிபமகஸ
(22வது மே. க. ஜன்னியம்)

பல்லவி

;சிந்தைகவர்ந்திடும் / ;சிலப்பதிகாரம் //
;சுந்தரமுத்தமிழின் / ;தொன்மைக்காதாரம் //

அனுபல்லவி

;அந்தமில் புகழ்பெறும் / ;இளங்கோவடிகளின் //
;அற்புதப் படைப்பாய் / ;அகிலத்திலங்கியே //
(சிந்தை)

சரணம்

;கற்பினிலே உயர்ந்த / ;கண்ணகி அற்புதமும்
;கலை உயர்மாதவியின் / ;நடன அரங்கினியல் //
;பற்பல யாழ்வகைகள் / இயலிசையாசிரியர் //
;பரதம்குழல் தண்ணுமை / மற்றும் இனிதே விளக்கி //
▲ ▲ (சிந்தை)

பாடல் 177

## அருள்மிகு நல்லை முருகன் புகழ்மாலை

இராகம்- கர்நாடகதேவகாந்தாரி ஆ- ஸகமபநிஸ
தாளம்- ஆதி அ- ஸ்நிதபமகரிஸ
(22வது மே. க. ஜன்னியம்)

தனன தன தான தனன தனதான / தன்ன தனதனன தனதானா //
அழகு மயி லேறி அடியார்வினைதீர / என்றும் நலமருளும் முருகோனே //
அரிய குற மாதை அடையப் புனமீதி / லன்று கிழவடிவில் வருவேலா //
தெளியு மன தாகத் தினமு முனைநாடிச் / சிந்தை உருகிநிதம்
தொழுதேனே //
தயவு மிக வாகி எனது வினைதீர / வந்து விரைவிலருள் புரிவாயே //
அழிவு செயு சூரன் அழியக் கரமீதிற் / கொண்டு அயிலதனை விடுசீலா //
அமரர் நலமாக உலகுஇனிதாகச் / செய்த கருணைமிகு சிவபாலா //
எழிலை உள தான இடமி தனைநாடி / வந்துதினமடியார்
தொழவேதான் //
அருளைஇனி தாக அருளு தலமான / நல்லை தனிலமரு பெருமானே //
நல்லைதனில மருபெருமானே / நல்லைதனிலமரு பெருமானே //
▲ ▲



பாடல் 178

## அருள்மிகு கதிர்காம முருகன் புகழ்மாலை

இராகம்: மோகனம் ஆ- ஸரிகபதஸ
தாளம்: ஆதி அ- ஸ்தபமகரிஸ
(28வது மே. க. ஜன்னியம்)

தனன தனன தனன தனன / தனன தனன தன தானா //
சரவ ணைதனில் வனச மலரில் தவழு மழுக சிவ பாலா
சரண மெனநின் அடியி ணைதனை / உருகி நிதமும் தொழு தேனே //
அரியின் மருக பரமன் செவியில் / பிரணவஉரை மொழி சீலா //
அயனின் மமதை அழியச்சிறையி / லிடுகு ருபர அருள் தாராய் //
கிரிபொ டிபட விடுஅ யிலினைக் / கரமி சைகொளு கதிர்வேலா //
கிருபை புரிய மயிலில் விரைவில் / அழகு திகழ வரு வாயே //
கருணை பொழிய அடியர் மகிழக் / கதிர மலையிலுறை வோனே //
கருது வரம தருளு இனிய / குறம களிணை பெரு மானே //
▲

பாடல் 179

## அருள்மிகு தொண்டமானாறு முருகன்

இராகம்: பெகாக் ஆ- ஸகமபநிதநிஸ
தாளம்; கண்டஏகம் அ- ஸ்நிதபமபகாமரிஸ
(29வது மே. க. ஜன்னியம்)

தன்னத் தன்னன தானன தனதா னா //
செல்வன் என்றுமை யேமகிழ் முருகோ னே //
செல்வந் தந்திடு பூமகள் மருகோ னே //
சொல்லும் நின்புக ழேபெரு புனிதா னே //
செய்யும் நல்வினை யாருள முறைவோ னே //
நல்கும் நல்வழி வேலரு புனலோ னே //
நண்ணும் என்னுள மேநித முறைவா யே //
வெல்லும் நல்அயி லேகர முடையோ னே //
செல்வச் சந்நிதி வேலவ பெருமா னே //

---

வருபுனல் - ஆறு (தொண்டமானாறு)
▲ ▲

பாடல் 180

## மீசாலை அருள்மிகு இலந்தைக்கூடல் கங்காணியார் முருகன் புகழ் மாலை

இராகம்: கர்நாடா தேவகாந்தாரி
தாளம்: க. சாப்பு

அ- ஸகமபநிஸ்
அ- ஸ்நிதபமகரிஸ
(22வது மே. க. ஜன்னியம்)

தானதன தானதன தானதனா தானா
பாதிமதி // சூடுமிறை / பாலகனே // வேலா //
பாதமதை // நாளும்தொழ // வேயருள்வாய் // நாதா //
ஆதிஉமை // வாரிஇணை // ஆறுமுகா // சீலா //
ஆடிவரு // தோகைமயில் // மேல்விரைவாய் // வாவா //
சூதமதைக் // கூறுசெய்த // வேலவனே // போதா //
சீரிலந்தைக் // கூடலுறை // நாயகனே // தேவா //
காதலொடு // பூசைசெய்கங் // காணிபரா // வாகா //
காசினியி // லேமகிமை // தங்குபெரு // மானே //

பாடல் 181

## மீசாலை அருள்மிகு கரும்பிமாவடி முருகன் புகழ்மாலை

இராகம்: சாம்போதி
தாளம்: மி சாப்பு

அ- ஸரிகமபதஸா
அ- ஸ்நிதபமகரிஸ
(28வது மே. க. ஜன்னியம்)

தனந்த / தான்தன // தனத / னதாதன // தன / தானா //
குருந்த / மாநிழல் // குருவ / டிவாய்வரு // சிவ / பாலா //
குறிஞ்சி / சேர்நில // அரசெ / னவேதிகழ் // குமர / ரேசா //
விரும்பு / பூகடம் // பணிஎ / ழிலாலரி // மரு / கோனே //
விரிந்த / தாமரை // மலர்த // னிலேதவழ்ந் // திடு / சீலா //
மருங்கி / லேஇணை // இரும / டவாரொடு // வரு / கோலா //
மகிழ்ந்து // வாசர / வணுபு / வனேயருள் // தரவே / தான் //
விரிந்த / தோகைகொள் // மயிமி / சையேவரு // எழி / லோனே //
கரும்பி / மாவடி // தனிலி // னிதேயமர் // பெரு / மானே //
▲ ▲



பாடல் 182

## தில்லானா (நல்லை முருகன் பேரில்)

இராகம்: கல்யாணவசந்தம்
தாளம்: ஆதி (திஸ்ரநடை)

ஆ: ஸகமதநிஸ்
அ: ஸ்நிதபமகரிஸ
(21வது மேளகர்த்தாவின் ஜன்னியம்)

பல்லவி

தீம்த திரன தொம்திர்தா னிதிர / னா ; ; திர னாதொம்
ருத்தானி //

அனுபல்லவி

தாம்த தீம்த தீம்த னாத்திர / திரதி ரதிர னாதி ரனா //
உதன தோம்த நாதிருதிரு திருதானி / தில்லா னாதிர
னாதொம்திருதிரு திருதானி //

சரணம்

சந்தத முனையே சிந்தையி லேகொண்டு / வந்தனை செய்தேனே/
நல்வர மருள்வாய் //
கந்தனே நல்லைத்த லத்தினி லமர்ந்தாய் / சுந்தரத் தாள்சூட்டச
சமய மிதுவே
தர,ம் தகிட ஸ்நித பமக / ஜெம் ;தக ஜெம்க மதநி //
ததீம் ஜொணுத ஸகா மதநி / ஸ்கம் திமித்த தபம ஜொணுத்த
தாம் தாம் தாம் நாதிருதொம் தொம்திருதொம் /
ஸ்ாஸ்ா,ஸ் / ஜெம்; ஜெம் ; ஜெம் //
மகரி கிடதொம் கமம ததக /
திம்தரிகிடதொம் தீம்தரிகிடதொம்/தீம்தரிகிடதொம், தரிகிடதொம்//
(தீம்த)

பாடல் 183

இராகம்: மத்தியமாவதி — ஆ- ஸரிமபநிஸ்
தாளம்: ஆதி — அ- ஸநிபமரிஸ

(22வது மே. க. ஜன்னியம்)

சித்திதரு கணபதிக்குச் ஜெய மங்களம் //
சிவகாம சுந்தரிக்குச் ஜெய மங்களம் //
நர்த்தன்நட ராஜனுக்குச் ஜெய மங்களம் //
நடனகாளி துர்க்கைக்கும் ஜெய மங்களம் //

2. முத்துமாரி திருமகட்குச் ஜெய மங்களம் //
முகில்வண்ணன் மாலுக்குச் ஜெய மங்களம் //
பத்திரர்க்கும் வயிரவர்க்கும் ஜெய மங்களம் //
பரிவுமிக்க ஐயனார்க்குச் ஜெய மங்களம் //

3. கலைமகள் சரஸ்வதிக்குச் ஜெய மங்களம் //
காக்கும் தெய்வம் யாவுக்கும் ஜெய மங்களம் //
நலம்புரிவோர் அனைவருக்கும் ஜெய மங்களம் //
நற்புலவோர் யாவருக்கும் ஜெய மங்களம் //

4. முத்தமிழ் வளர்ப்பவர்க்குச் ஜெய மங்களம் //
மூர்த்தி தலம் வணங்கினர்க்குச் ஜெய மங்களம் //
உத்தம மறையவர்க்குச் ஜெய மங்களம் //
உயர்பக்தி வளர்ப்பவர்க்குச் ஜெய மங்களம் //

ஜெயமங்களம் ஜெயமங்களம் //
ஜெயமங்களம் ஜெயமங்களம் //

# இந் நூலாசிரியர்பற்றி..
# சைவத் தமிழறிஞர்களின் கருத்து



1. செந்தமிழ்க் கீத மாலை
தேன்சொரி மலர்கள் பல்கிப்
பைந்தமிழ்ச் சோலை யாகப்
பாலர்வாய் மணக்கச் செய்தான்
எந்தமக் கினியான் நல்லோன்
ஏரம்ப மூர்த்தி என்பான்
வந்த ஏழிசையின் செல்வன்
வழிவழி சிறக்க மாதோ

(நூலாசிரியரின் முதலாவது வெளியீடான, செந்தமிழ்க் கீத மாலைக்கு, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் அளித்த பாராட்டுப் பா - 1964)

2. தெய்வம் பராவித் திருவருட் பேறுறன்றி
உய்ய உயர்கீதம் ஓதனார் - மெய்மைசெறி
ஏரம்ப மூர்த்தி இசைக்குரிசில் மற்றதனை
யாரும் மகிழ இனிது

(இரண்டாவது வெளியீடான தெய்வக் கீதமாலை - 1970 பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் அளித்த அணிந்துரை)

3. ஏரம்ப மூர்த்தி இசைப்பாடல் ஈசனிடம்
வாரம் பெருக்கி மகாருளத்தில் - ஈரமுறச்
செய்யும் இயல்புகண்டோம் செல்வச் சிவனருளால்
வையகத்து வாழி வளர்ந்து.

(தருமபுர ஆதீன வித்துவான் தத்புருஷ தேசிகர் அவர்கள் வாழ்த்து - தெய்வக் கீதமாலை - 1970)

4) ''கிழக்கே ஓர் பேரொளி ''தெய்வக்கீத மாலை'' காலைக் கதிரவன் எனத் தோன்றுவதைக் கண்டதும், தெய்வீகத்தின் பேராற்றலை உள்ளம் நினைந்து உளமார வாழ்த்தி வணங்குகிறது. தெய்வக் கீத மாலை ஆசிரியரின் தொண்டு தெய்வத் தமிழ்கூறும் நல்லுலகெங்கும் பரவி வையத்தைத் தெய்வ மயமாக்க எல்லாம்வல்ல இறைவன் அருள் புரிந்துள்ளான். வாழ்க நம் தமிழிசைக் கவிஞர், வளர்க அவர் தம் தெய்வீகப் பணி''

(தெய்வக் கீத மாலை - வித்துவான் க. கணபதிப்பிள்ளை 1970)

5) சங்கீத புஷணம், சித்தாந்த பண்டிதர் ஏ. கே. ஏரம்பமூர்த்தி அவர்கள் அன்னையின் மீது பாடிய திருவூஞ்சலைப் பார்த்து எமது உள்ளம் களிப்படைகிறது. அவரது சொற் சித்திரங்களையும், அன்னைமீது கொண்ட பக்தியையும் ஆர்வத்தையும் நிரம்பிய புலமையையும், கேசாதி பாதம் ஈறாக ஒவ்வொரு பாக்களும் வெளிப்படுத்துகின்றன. காப்பு, ஊஞ்சல் வாழ்த்து, எச்சரிக்கை, பராக்கு, லாலி, மங்களம் ஆகிய வகைகள் அழகாக அமைந்தவை மெச்சத் தக்கது. நான் அவர்கள் புலமையையும் பக்தியையும் உளமார வாழ்த்துகின்றேன்.
(சாவகச்சேரி - மண்டுவில் சோலையம்மன் திருவூஞ்சல் — கிளிநொச்சி ஜெயந்திநகர் மகாதேவ ஆச்சிரமம், தவத்திரு வடிவேல் சுவாமிகள் - 1978)

6. ''செந்தமிழ்க் கீத மாலை'' - வெளியீட்டு விழாவின் போது தமிழிசைக் கவிஞர் என்னும் பட்டம் சூட்டிக் கௌரவிக்கப்பட்டார். சங்கீத கதாப் பிரசங்கமும் செய்து வரும் இவர் பண்ணிசைக் கச்சேரிகளும் நிகழ்த்துவதில் திறமை பெற்றவர்.
(ஈழநாடு - 28 - 2 - 1970)

7: இந்திய வானொலியிலும், தமிழக இசையரங்குகளிலும் திரு. ஏ. கே. ஏரம்பமூர்த்தி இயற்றியுள்ள பல பாடல்கள் இடம் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.
(தினகரன் 7 - 6 - 1982)

பிரபல பாடகி வாணி ஜெயராம் கொழும்பில் இசை நிகழ்ச்சி நடாத்திய போது சங்கானை - வெல்வில் முருகன் பேரில் இவர் ஆக்கிய பாடல் பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது